# மனித உரிமைகள் மீட்பு

ஒதுக்கிவிடமாட்டோம்! ஒதுக்கிவிடமாட்டோம்!! மாதமிருமுறை இதழ்

உரிமை-4 மீட்பு-9 மே 1-15-2020 விலை ₹10/-


## கரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து பிரதமர் நரேந்திர மோடி, முதல்வர் பழனிசாமியுடன்



## காணொலி காட்சி மூலம் ஆலோசனை

## ஏழை எளிய மக்களுக்கு ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது



### 20 லட்சம் கோடி நிவாரணம்





## விழுப்புரம் மாணவியை எரித்துக் கொன்றதன் பின்னணி

# திண்டுக்கல்லில் தடையின்றி மணல் திருட்டு

# கண்டுகொள்ளாமல் இருக்கும் அதிகாரிகள்

**திண்டுக்கல் மாவட்டத்தில் ஊரடங்கால் பிற வாகனங்கள் சென்றுவர பலத்த கெடுபிடி உள்ள நிலையில், போலீஸார் கண்காணிப்பு இருந்தும் தங்கு தடையின்றி லாரிகளில் மணல் திருட்டு தொடர்ந்து நடந்து வருகிறது.**

திண்டுக்கல் மாவட்டத்தில் ஆறு, குளம், கண்மாய்களில் பரவலாக மணல் திருட்டு என்பது வாடிக்கையாக நடைபெறும். ஊரடங்கு காலத்தில் தொடக்கத்தில் மணல் திருட்டு சிறிது குறைந்திருந்தது. ஆனால், சில நாட்களாக ஆறு, குளம், கண்மாய்களில் மணல் திருட்டு மீண்டும் அதிகரித்துள்ளது.

வேடசந்தூர் அருகேயுள்ள குடகனாற்றில் மினிலாரியில் மணல் கடத்தல் தங்கு தடையின்றி நடக்கிறது. வழக்கமான பணியின்போதே மணல் திருட்டை கண்டு கொள்ளாத அதிகாரிகள், தற்போது கரோனா பணியில் இருப்பதால் மணல் திருட்டை முற்றிலுமாக கண்டுகொள்ளவில்லை. திண்டுக்கல் மாவட்டத்தில் தொடரும் மணல் திருட்டால், நிலத்தடி நீர்மட்டம் பாதிக்கப்பட்டுள் ளதாக பொது மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.



# மனித உரிமைகள் மீட்பு

**(மாத இருமுறை இதழ்)**

உரிமை-4 மீட்பு-9 மே 1-15-2020



**வெளியிட்டாளர்:** M. அப்துல்ரகுமான்.
**ஆசிரியர்:** S. லோகநாயகி.
**முதன்மை ஆசிரியர்:** K. மதுசூதனன்.
**இணை ஆசிரியர்கள்:**
CJ. சுதர்மன், Dr. L.K.காசிம்.
S.G.M.ரமேஷ், N.அன்பழகன்,
A. பிரபாகரன், G. வெங்கடேசன்
**நிர்வாக ஆசிரியர்:** அர. நாசர்கான்,
K. காதர் மொய்தீன்
**தலைமை செய்தி ஆசிரியர்:** M. இளவரசன்.
**பொறுப்பு இணை ஆசிரியர்:** Dr. குமரவேல்.
**கௌரவ ஆசிரியர்:**
புதுவை K.ராஜா ராம்குமார்
**கௌரவ செய்தி ஆசிரியர்:**
S.அருள் செலின் மேரி.
**முதன்மை துணை ஆசிரியர்:** S. விஜயகுமார்.
**பொறுப்பு இணை ஆசிரியர்:** R.அகிலேஷ்
**தலைமை ஆசிரியர்:** A. வீரசுந்தரம், A.சக்திவேல், தயாநிதி, D.G தினகரன்.
**தலைமை இணை ஆசிரியர்கள்:**
V.P. சேகர் ஜோதி, L.S. மனோகரன்,
Dr.L. ரமேஷ், G. திருசெந்தில்வேல், A.விஜி,
T.அரவிந்தன்
**தலைமை கௌரவ ஆசிரியர்கள் :**
D. கென்னடி, T. செந்தில் குமார்,
S. அப்துல் ரசாக்.
**செய்தி ஆசிரியர்:** Dr.K. கலைசெல்வன்.
**செய்தி துணை ஆசிரியர்:**
S.A. சையது ஆலிம் சாகிப்.
**தொகுப்பு ஆசிரியர்கள்:**
S. ரமேஷ்,
**தொகுப்பு இணை ஆசிரியர்கள்:**
P. முருகேசன், நசீர்முகமது, M. கார்திக்.
**தொகுப்பு துணை ஆசிரியர்கள்:**
K.G. விஜயகுமார், J. கோவிந்தராஜ்.
**துணை ஆசிரியர்கள்:**
C. ஞானசேகரன், S. சிவா.
**கௌரவ துணை ஆசிரியர்கள்:**
S. ரவிக்குமார், M. தனராஜ்,
A. கோவிந்தராஜ், D. கோபிநாத்,
P. உதயகுமார், C. தியாகராஜன்,
S. சுல்தான் அலாவுதீன்.
**உதவி ஆசிரியர் குழு:**
M.S. ஆரோக்கிய சாமி, P. கிருஷ்ணமூர்த்தி,
M. விஜயேந்திரன், ராஜாமுகமது,
R. சந்திரபோஸ், சுஜிதா, S. மோகன்,
A.T. அஷ்ரப், K. நமச்சிவாயம், H. அஷ்ரப்,
A. சக்திவடிவேல்
**முதன்மை நிருபர்கள்:**
குர்ஷித் ஆலிம் கான், S. முரளிதரன்,
S. சுமதி, S. சல்மான் அஹமது,
R. மகேஷ்வரி, T. சுதாகர், S. பதர்நிசாபேகம்,
S. சுரேஷ்.
**நிருபர்கள் :**
M. ஈஸ்வரி, P. வேல்முருகன், M. சக்திவேல்,
P.சதிஷ், P. இருளாண்டி, S.சரவணன்,
டேவிட் ப்ரைட், J. வெங்கடேசன்,
D. வில்வநாதன், A. பார்த்திபன்
தண்டாயுதபானி, Dr. விஜயகுமாரி,
Dr. A. அருள்சாமி
M. சுரேஷ்குமார், M. கலந்தர்முகைதீன்,
D. ராஜீவ்காந்தி, சக்கீனாசொர்னலதா,
M. செய்யது சஹாபுதீன், B. அறிவழகன்,
G. ஜாபர் அலி, R. சுந்தர்ராஜ், R.ஜெயகுமார்,
H. AR.பத்மநாபன், S. சீனிவாசன்,
P. வேல்முருகன், M.திம்மராஜ், P. ராஜ்குமார்,
V. செல்வமணி, G.S. பிரகாஷ், C, பிரபாசிங்,
R. நாகராஜன், ஜெஸ்பீன்தேவகுமார்.
A.முகமது சவுபிங், மேசா (எ) சாகுல் அமிது,
பாபாசுப்பிரமணியன், ஆ.முகமது பாஷிர்,
**புகைப்பட நிருபர்கள் :**
T. அரவிந்தன், ஜான் சேவியர், தியாகராஜன்,
R. சுகந்தி, T. சாந்தி
**சட்ட ஆலோசகர்கள் :**
C. பாலாஜி, ஞானசேகரன்



**இந்த இதழ் குறித்த அனைத்து தொடர்புகளுக்கும் முகவரி:**

ஆசிரியர்,
**மனித உரிமைகள் மீட்பு (மாத இருமுறை இதழ்)**
பேருந்து நிலையம் எதிர்புரம், வழிக்கடவு P.O.
மலப்புரம் D.T, கேரளா - 679333
**தொடர்புக்கு:**
94427 91703, 95434 10000, 95977 76585,
98947 67446, 95977 76585
**வர்த்தக பிரிவு தொடர்புக்கு:**
K. மதுசூதனன்: 94427 91703
Mail: manithurimaigalmeetpu@gmail.com


“மனித உரிமைகள் மீட்பு” இப்பொழுது ஆன்லைன் செய்திகளாய் உலகமெங்கும். https://manithaurimaigalmeetpu.page/ என்ற website மூலமாக காணலாம் மற்றும் சமூக வலைத்தளத்தில் பகிரலாம்.


எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உயர் நீதிமன்றங்களில் வரம்புக்கு மட்டுமே உட்பட்டவை. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு மனித உரிமைகள் மீட்பு இதழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் சிறப்பு கட்டுரையாளர்கள் இன் கருத்துகள் அவர்களின் சொந்த கருத்துகளே.



# கரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து பிரதமர் நரேந்திர மோடி, முதல்வர் பழனிசாமியுடன் காணொலி காட்சி மூலம் ஆலோசனை

**சென்னையில் கரோனா பாதிப்பு அதிகரித்து வருவதால் தமிழகத்தில் விமானம் மற்றும் ரயில் போக்கு வரத்தை மே 31ம் தேதி வரை தொடங்க அனுமதிக்க வேண்டாம் என்று பிரதமர் மோடியிடம் முதல்வர் பழனிசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார். அத்துடன் தமிழகத்துக் கான நிதியுதவியை வழங்கவும் வலியுறுத்தியுள்ளார்.**

நாடு முழுவதும் கரோனா வைரஸ் தடுப்புக்காக மே 17ம் தேதி வரை ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், ஊரடங்கு தொடர்பாகவும், கரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் பிரதமர் நரேந்திர மோடி, மாநில முதல்வர்களுடன் காணொலி காட்சி மூலம் ஆலோசனை நடத்தினார். இதில், தமிழகம் சார்பில் முதல்வர் பழனிசாமி, அமைச்சர்கள் சி.விஜய பாஸ்கர், ஆர்.பி.உதயகுமார், தலை =மைச் செயலர் கே.சண்முகம், டிஜிபி ஜே.கே.திரிபாதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### ரொக்க ஊதியத்துக்கு அனுமதி

ஆலோசனை கூட்டத்தில், முதல்வர் பழனிசாமி பேசியதாவது:

தமிழகத்தில் ஊரடங்கு கடுமையாக அமல்படுத்தப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் 100 நாள் வேலை திட்டம், கட்டுமானம் மற்றும் விவசாயப் பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 100 நாள் வேலை திட்ட பயனாளிகளுக்கு



ஊதியத்தை ரொக்கமாக வழங்க அனுமதிக்க வேண்டும்.

மத்திய அரசின் ஊரடங்கு தளர்வு அறிவிப்பால், சில குறிப்பிட்ட தொழிற்சாலைகள் 33 சதவீத பணியாளர்களுடன் இயங்க அனுமதித்துள்ளோம். ஜவுளி மற்றும் தோல் தொழிற்சாலைகள் ஏற்றுமதி செய்யவும், அதற்கான மாதிரிகளை வெளிநாட்டு வாடிக்கையாளர்களிடம் சேர்க்கவும் அனுமதிக் கப்பட்டுள்ளது.

மே 10ம் தேதி நிலவரப்படி தமிழகத்தில் 7,204 பேர் கரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். சரியான மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுவதால், நாட்டிலேயே மிகக் குறைவாக தமிழகத்தில் இறப்பு விகிதம் 0.67 சதவீதமாக உள்ளது. 27 சதவீதம், அதாவது 1,959 பேர் குணமடைந்துள்ளனர். தற்போது 37 அரசு, 16 தனியார் பரிசோதனைக் கூடங்களில் தினமும் 13 ஆயிரம் பரிசோதனைகள் நடக்கின்றன. தொடர்ந்து அதிக அளவில் பரி சோதனைகள் செய்யத் தேவையான பிசிஆர் பரிசோதனை கருவிகளை வழங்க வேண்டும்.

### வெளிமாநில தொழிலாளர்கள்

தொழிலாளர்கள், சிகிச்சைக்காக வந்தவர்கள் என வெளிமாநிலங்களைச் சேர்ந்த 13,284 பேர், 12 ரயில்கள் மூலம் சொந்த ஊர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். மேலும், மே 17ம் தேதி வரை 61 ரயில்கள் மூலம் வெளிமாநில தொழிலாளர்களை அனுப்ப திட்டமிட்டுள்ளோம். இதற்கு மாநிலங்களின் முதல்வர்கள் ஒப்புதல் அளிக்க வேண்டும். இதுதவிர, வெளிநாடுகளில் இருந்து 4 விமானங்கள், ஒரு கப்பல் மூலம் 900 பய ணிகள் தமிழகம் அழைத்து வரப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் உள்ள 2 கோடியே 2 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் ஏப்ரல் மே, ஜூன் ஆகிய மாதங்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. தினமும் 134 உழவர் சந்தைகள், 9,200 வாகனங்கள் மூலம் 5,700 மெட்ரிக் டன் காய்கறிகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. எனவே, விவசாயிகளின் வருவா யைப் பெருக்க, போக்குவரத்து மானியம் வழங்க வேண்டும்.

சென்னையில் கரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை

அதிகரித்து வருவதால், மே 31ம் தேதி வரை விமானம், ரயில் போக்குவரத்தை தமிழகத்தில் தொடங்க வேண்டாம்.

## நிதி வழங்க வேண்டும்

தேசிய சுகாதார திட்டத்தின்கீழ் ஏற்கெனவே அளித்த ரூ.312 கோடி முழுமையாக பயன்படுத்தப்பட்டுள்ளதால், 2வது தவணையை உடனடியாக விடுவிக்க வேண்டும். ஏற்கெனவே கேட்டிருந்த ரூ.2 ஆயிரம் கோடி சிறப்பு நிதியை தமிழகத்துக்கு உடனடியாக வழங்க வேண்டும். கடன்பெறும் அளவை 33 சதவீதத்துக்கும் அதிகமாக அனுமதிப்பதுடன், ஜிஎஸ்டி இழப்பீட்டையும் உடனடியாக வழங்க வேண்டும்.

மேலும் நகர்ப்புற, ஊரக உள்ளாட்சிகளுக்கு நிதி ஆணையத்தின் பரிந்துரை மானியத்தில் 50 சதவீதத்தை விடுவிக்க வேண்டும். மத்திய பட்ஜெட்டில் மாநிலங்களுக்கான அதிகாரப்பகிர்வை ஒருபோதும் குறைக்கக் கூடாது.

தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ரூ.1,000 கோடியை விடுவிக்க வேண்டும். தமிழகத்தில் இலவச அத்தியாவசிய பொருட்களுக்கான உணவு தானிய அளவை கூடுதலாக ஒதுக்க வேண்டும். நெல் கொள்முதலுக்கான மானியம் ரூ.1,321 கோடியை விரைவாக வழங்க வேண்டும்.

## கடன் மறுசீரமைப்பு

மின்சாரத்துறை மீதான நிதிச்சுமையை குறைக்க நிவாரண தொகுப்பு வழங்க வேண்டும். தமிழகத்தின் சிறு, குறு தொழில் பிரிவுகளுக்கான ஆண்டு நிதித்திட்ட இலக்கை ரூ.1 லட்சத்து 25 ஆயிரம் கோடியாக உயர்த்த வேண்டும். அவர்கள் வாங்கிய கடன்களை திரும்ப செலுத்துவதற்கான கடன் மறுசீரமைப்பு தொகுப்பை அறிவிக்க வேண்டும். புதிய செயல்பாட்டு மூலதன உதவிகளை அறிவிக்க வேண்டும்.

தமிழகத்தில் உள்ள சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் சிட்பி மற்றும் வங்கிகளில் இருந்து ரூ.2,500 கோடிக்கான நிதியுதவி வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு முதல்வர் பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

## ஆட்சியர்களுடன் ஆலோசனை

பிரதமருடனான கலந்துரையாடலைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர்களுடன் முதல்வர் பழனிசாமி நாளை ஆலோசனை நடத்துகிறார். காணொலி காட்சி மூலம் நடக்கும் இந்த கூட்டத்தில் மே 17ம் தேதியுடன் ஊரடங்கு முடிவுக்கு வரும் பட்சத்தில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்தும், கூடுதலாக கடைகளை திறப்பது குறித்தும் விவாதிக்கப்பட உள்ளது.

## மக்கள் விருப்பத்தின்படியே ஊரடங்கில் தளர்வு: பிரதமர் மோடி

மாநில முதல்வர்களுடன் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது:

கரோனா வைரஸுக்கு எதிரான போரை இந்தியா திறம்பட நடத்தி வருவதாக உலக நாடுகள் புகழாரம் சூட்டி வருகின்றன. இதில் மாநில அரசுகளின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. வைரஸ் பரவலை தடுக்கவே ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. வெளிமாநிலங்களில் உள்ளவர்கள், சொந்த ஊருக்கு செல்ல விரும்புகின்றனர். இது இயல்பானது. எனவே, மக்களின் விருப்பத்துக்கு ஏற்ப ஊரடங்கில்தளர்வுகள் அறிவிக்கப்பட்டன. தொழிலாளர்களை சொந்த மாநிலத்துக்கு அழைத்துச் செல்ல சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன. தொழிலாளர்களின் இடபெயர்வால் கிராமங்களுக்கு கரோனா வைரஸ் பரவி விடக்கூடாது. இது மிகப்பெரிய சவால். இந்த சவாலை மாநில அரசுகள் வெற்றிகரமாக சமாளிக்க வேண்டும்.நாட்டின் பல்வேறு பகுதிகளில் வளர்ச்சிப் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளது. வரும் நாட்களில் பொருளாதார வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் மேலும் தீவிரப்படுத்தப்படும்.இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்தார்.

# 10ம் வகுப்பு தேர்வு எழுதும் மாணவர்கள் அச்சப்படத் தேவையில்லை

**10ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதவுள்ள மாணவர்களுக்குத் தேவையான ஏற்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சியர்கள் நேரடியாகக் கண்காணித்து நடவடிக்கை எடுக்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார். எனவே, தேர்வு எழுதும் மாணவர்கள் அச்சப்படத் தேவையில்லை என பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்தார்.**

தமிழக முதல்வர் எடுத்த தீவிர நடவடிக்கைகளால், இந்திய அளவில் கரோனா பாதிப்பால் ஏற்படும் இறப்பின் எண்ணிக்கை தமிழகத்தில் குறைந்துள்ளது. யூடியூப், கல்விச்சேனல், மத்திய அரசின் தொலைக்காட்சி மற்றும் தனியார் தொலைக்காட்சி மூலமாக மாணவர்களுக்கு பாடம் நடத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் மாணவர்கள் ஒருமணி நேரம் பாடம் கற்க முடியும்.

இப்பணி தொடர்ந்து நடைபெறும். 10ம் வகுப்பு பொதுத்தேர்வை மாணவர்கள் எழுதுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தெளிவான விளக்கம் அளிக்கப்படும்.



மாணவர் நலன் கருதி, பெற்றோர் நிலை கருதி 10ம் வகுப்பு பொதுத்தேர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. கல்வியாளர்கள் குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில், அதனை பரிசீலித்து முதல்வர்தான் இந்த ஆணையைப் பிறப்பித்துள்ளார்கள். குஜராத், கேரள மாநிலங்களில் 10ம் வகுப்புத் தேர்வுகள் முடிவுற்று விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் நிலையில் உள்ளது.

தேர்வு மையங்களை பார்வையிடுதல், மாணவர்கள் பத்திரமாக தேர்வு எழுதி, வீடு திரும்பும் வரையிலான பணிகளை மாவட்ட ஆட்சியர்கள் நேரடியாக கண்காணிக்க வேண்டும் என தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார். ஆகவே, அதைப்பற்றி எந்த அச்சமும் படத்தேவையில்லை.



**"கோவிட்19 ஊரடங்கின் பாதிப்பு இன்னும் எத்தனை மாதங்களுக்கு என்ற தூரமும், திசையும், எல்லையும் அறியாத துயரத்திலும், திகைப்பிலும் இருக்கும் நமது விவசாயிகளுக்கும், புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கும், தெருவோர வியாபாரிகளுக்கும், உடனடியாகப் பயனளிக்கும் ஆக்கபூர்வமான நிவாரணங்களைக் கொடுக்காமல் அலங்காரப் பேச்சுகள் மூலம் ஏமாற்றி விடலாம் என்று இன்னமும் கூட மத்திய பாஜக அரசு நினைத்துக் கொண்டிருப்பது மிகுந்த கவலையளிக்கிறது.**

*20 லட்சம் கோடி நிவாரணம் என்ற பாஜகவின் அரசியலுக்கான தலைப்புச் செய்தி ஏழை எளிய மக்களுக்கு ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பதைப் பிரதிபலிக்கும் வகையிலேயே மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் அறிவிப்பும் இருக்கிறது.*

*இந்திய நாடாளுமன்றத்தின் மூன்றாவது பெரிய கட்சியான திமுக சார்பில் வலியுறுத்தப்பட்டு வரும், 5000 ரூபாய் நிதியுதவியையோ அல்லது அகில இந்திய காங்கிரஸ் வலியுறுத்தியுள்ள 7500 ரூபாய் நிதியுதவியையோ பணமாக, நேரடியாக, உடனடியாக வழங்க மனமின்றி குறிப்பாக விவசாயிகளுக்கு மேலும் கடன் வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளார்.*

*அதேபோல் நடைபாதை வியாபாரிகளுக்குப் பத்தாயிரம் ரூபாய் கடனாம். அதுவும் வறுமை பற்றி எரிந்து கொண்டிருக்கும் நேரத்தில் வாழ்வாதாரம் கண்ணுக்கு எட்டும் தொலைவில் இல்லாத நிலையில், இன்னும் ஒரு மாதம் கழித்து அந்தத் திட்டம் வருமாம். வீடு தீப்பிடித்து எரியும்போது, உடனடியாகக் கிடைக்கும் தண்ணீரையும், மண்ணையும் வாரி இறைத்து அணைத்திட முயற்சிப்பதைப் போன்றது, பணமாகக் கொடுக்கப்படும் நிவாரண உதவி.*

*தீ பற்றி எரியட்டும்; அவசரப்பட வேண்டாம்; தீயணைப்பு நிலையத்திற்குச் செய்தி அனுப்பி இருக்கிறோம், அங்கிருந்து வண்டி வரட்டும், பொறுத்திருங்கள் என்று சொல்வதைப் போல இருக்கின்றன மத்திய நிதி அமைச்சரின் அறிவிப்புகள்.*

*சாலை விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்கு அங்கேயே முதல் உதவி செய்யாமல், ரத்தம் கொட்டட்டும்; தொலைவில் இருக்கும் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை செய்து கொள்ளலாம்; அதுவரை வலியைப் பொறுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்வதைப் போல இருக்கின்றன அந்த அறிவிப்புகள்.*



*முதல் உதவியைப் போன்றது,*

உடனடியாகக் கொடுக்கப்படும் நிவாரணப் பணம். ஏற்கெனவே வாங்கிய கடனையே திருப்பிச் செலுத்த முடியாமல், பல நூறு கணக்கில் தற்கொலை செய்து கொண்டிருக்கும் இந்திய விவசாயிகள் தலையில் மீண்டும் கடன் என்ற பாறாங்கல்லை ஏற்றி வைப்பது எந்த வகை நிவாரணம்? ‘சுமை தாங்கியாக’ ஆறுதல் தாருங்கள் என்று கேட்டால், ‘பிடி, இந்த மூட்டையையும் தலையில் வைத்துக்கொள்’ என்பது எந்த வகைப் பரிவு? என்ன வகை நியாயம்?



நிதி அமைச்சரின் இந்த நீண்ட நேரச் சொற்பொழிவுக்குப் பதிலாக; முத்தமிழறிஞர் கலைஞர் 7000 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்தது போல் திமுக பங்கேற்றிருந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு 60 ஆயிரம் கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்தது போல் ஒரே கையெழுத்தில், இந்திய

புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு இரு மாதங்களுக்கு ரேஷன் வழங்குகிறோம் என்றால் என்ன பொருள்? உடனடியாகப் பசிப்பிணி தீர்க்கும் இந்தியாதான் இன்றைய அவசரத் தேவையே தவிர, ‘மேக் இன் இந்தியாவோ’, ‘ஸ்டேண்ட் அப்’ இந்தியாவோ அல்ல. இந்தியர்களுக்கு உணவளித்திட வேண்டியது,

# ஏழை எளிய மக்களுக்கு ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது

## 20 லட்சம் கோடி நிவாரணம்

விவசாயிகளின் அனைத்துக் கடன்களையும் தள்ளுபடி செய்து மீளாத் துயரில் மூழ்கிக் கிடக்கும் அவர்களைக் கைதூக்கிக் கருணை காட்டிட ஏன் நிதியமைச்சர் முன்வரவில்லை?

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய அரசின் கடமை.

அதைத் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டமும் உறுதி செய்கிறது. சட்டப்படியான

கடமையை நிறைவேற்றுவதை நிவாரணமாக அறிவிப்பதற்குப் பதில் ஏன் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் அனைவருக்கும் நேரடியாகப் பண உதவி செய்து அவர்களை மன அழுத்தத்திலிருந்தும் வறுமையின் கோரப் பிடியிலிருந்தும், வாட்டி வதைத்திடும் ஏழ்மையிலிருந்தும் வெளியே கொண்டு வரக்கூடாது?

உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நிலை அறிக்கையில் மத்திய உள்துறை செயலாளரே 4.14 கோடி புலம்பெயர்ந்த தொழிலாளர்கள்தான் நாட்டில் இருக்கிறார்கள் என்று கூறியிருக்கும் போது நிதியமைச்சர் ரேஷன் வழங்குவதால் எப்படி 8 கோடி புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பயனடைவார்கள் என்பது புலப்படவில்லை? ஏன் இத்தகைய முரண்பாடு?

பேரிடர் நேரத்திலும் வழக்கம் போல் பகட்டு அறிவிப்புகளை வெளியிட்டு பாலிடிக்ஸ் செய்வதைத் தயவு செய்து தவிர்த்து விட்டு, கோவிட்19 துயரில் சிக்கித் திணறிக் கொண்டிருக்கும் ஏழை எளிய நடுத்தரப் பிரிவு மக்களைக் காப்பாற்றும் நேரடி நிதியுதவி நடவடிக்கைகளில் மத்திய நிதியமைச்சர், மேலும் தாமதிக்காமல் ஈடுபட வேண்டும்.

இனி தாமதம் உயிர்களைப் பலிகொண்டுவிடும் என்ற கசப்பான உண்மையை மத்தியில் ஆளவந்தார் உணர்ந்திட வேண்டும். ஆகவே, விவசாயிகளின் அனைத்து வங்கிக் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும். புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு மூன்று மாதங்களுக்கு தலா 5000 ரூபாய் வழங்கியும், எண்ணற்ற ஏழை, எளிய தாய்மார்கள் உட்பட ஒரு கோடிக்கும் மேற்பட்ட நடைபாதை வியாபாரிகளுக்கு 10,000 ரூபாய் நேரடி பண உதவி வழங்கியும் பாதிக்கப்பட்ட அனைவரையும் வறுமை, வெறுமை ஆகிய பலிபீடத்திலிருந்து மீட்டுப் பாதுகாத்திட வேண்டும்.

அதைவிடுத்து பணம் கொடுக்க முடியாது, இந்தா கடன் வாங்கிக் கொள் என்று சொல்வது, குறைந்தது ஐம்பது சதவிகித இந்தியர்களுக்கு எந்த வகையிலும் உதவாது. 'ஆபத்துக்கு உதவாப் பிள்ளை, அரும்பசிக்கு உதவா அன்னம், தாபத்தைத் தீராத் தண்ணீர்' போன்றதுதான் மத்திய பாஜக அரசின் ஆரவாரமான அறிவிப்புகள்.

எனவே உப்பரிகையிலேயே வீற்றிருந்து உலகத்தைப் பார்க்காமல், சற்று கீழே இறங்கிவந்து நாட்டின் நிதர்சனமான நிலை கண்டு, கருணை மழை பொழிந்திட வேண்டும் என்று, திமுக சார்பில் மத்திய அரசை மிகுந்த அன்புடன் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்". ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.






# டாஸ்மாக் மது விற்பனை மூலம் கிடைக்கும் வருவாயைப் பிற துறைகளிலிருந்து பெறுவதற்கு 5 ஆண்டுகள் வரை ஆகும்

## உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு வாதம்

**டாஸ்மாக் மது விற்பனை மூலம் கிடைக்கும் வருவாயைப் பிற துறைகளிலிருந்து பெறுவதற்கு 5 ஆண்டுகள் வரை ஆகும் என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு தனது வாதத்தைத் தொடங்கியுள்ளது.**

தமிழகத்தில் ஊரடங்கு காலத்தில் மதுக்கடைகளைத் திறக்கத் தடை கோரிய வழக்குகளை ஏற்கெனவே விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், டாஸ்மாக் மதுக்கடைகளை மூடவும், ஆன்லைன் மூலமாக மட்டுமே மது வகைகளை விற்பனை செய்ய வேண்டும் என்றும் உத்தரவிட்டிருந்தது. மேலும், இது தொடர்பாக, தமிழக அரசு தனியாக பதில் மனுத்தாக்கல் செய்ய முழு அமர்வு உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், இரண்டாவது நாளாக வழக்கு விசாரணை தொடங்கியபோது அரசுத் தரப்பில் பதில் தாக்கல் செய்யப்படவில்லை.

அப்போது, தமிழக அரசு தலைமை வழக்கறிஞர் விஜய்நாராயண் ஆஜராகி விரிவான பதில் மனுவைத் தாக்கல் செய்ய அவகாசம் வழங்க வேண்டுமெனவும், அதே சமயம் மனுதாரர்கள் மற்றும் இடையீட்டு மனுதாரர்கள் வைத்த வாதங்களுக்குப் பதில் வாதங்களை முன்வைக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதையேற்ற நீதிபதிகள், அரசு தலைமை வழக்கறிஞர் வாதிட அனுமதித்ததுடன், வாதங்கள் நிறைவடையாத பட்சத்தில் விசாரணை நடைபெறும் என அறிவித்தனர்.

இதைத் தொடர்ந்து அரசு தலைமை வழக்கறிஞர் விஜய்நாராயண் தொடங்கிய பதிலுரையில், தமிழகத்தின் வளர்ச்சிக்கு டாஸ்மாக் மதுபான விற்பனை மூலம் கிடைக்கும் வருவாய் முக்கியப் பங்கு வகிக்கிறது என்றும், டாஸ்மாக் மதுபான விற்பனைக்குப் பதிலாக வேறு துறைகள் மூலம் இந்த வருவாயை ஈட்ட 4 அல்லது 5 ஆண்டுகளாகும் எனவும் வாதத்தை முன்வைத்துள்ளார்.

# மனிதநேயச் சேவையில் ஈடுபட்ட காவல் ஆய்வாளர்

**காவல் நிலையத்துக்கு கவலையோடு வந்த 70 வயது முதியவர் ஒருவரின் மனக்கவலையைப் போக்கி அவருக்கு மகிழ்ச்சியை நிலைக்கச் செய்திருக்கிறார் சீர்காழி காவல் ஆய்வாளர் மு.சதீஷ்.**

சீர்காழி காவல் நிலையத்தில் பறிமுதல் செய்யப்பட்ட இருசக்கர வாகனங்களை அதன் உரிமையாளர்களிடம் ஒப்படைத்துக் கொண்டிருந்திருக்கிறார் பொறுப்பு ஆய்வாளர் சதீஷ். அப்போது அங்கு வந்த 70 வயதுடைய முதியவர் ஒருவர் தயங்கியபடி நின்றார். அவரை அழைத்து அமரவைத்து ஆசுவாசப்படுத்தி விசாரித்திருக்கிறார் சதீஷ்.



சன்னமான குரலில் முதியவர் தன்னைப் பற்றிக் கூறியிருக்கிறார். அவர் அரசு உயர் அதிகாரியாகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். அவரது மனைவி புற்றுநோயால் கடந்த 5 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். அவரது மகன் பெங்களூரு ஐ.டி. கம்பெனியில் பணிபுரிகிறார். மருமகள், இரண்டு பேரக் குழந்தைகளோடு சீர்காழியில் இருக்கிறார். அவர்களோடுதான் தானும் வசித்து வருவதாகக் கூறிய பெரியவர், பிறகுதான் தனது மனக்கவலையை மெல்லப் பகிர்ந்திருக்கிறார்.


வயது முதிர்வு காரணமாக சர்க்கரை வியாதி, ரத்த அழுத்தம், இருமல் மற்றும் சளி இருப்பதாகவும், கடந்த சில வாரங்களாக இருமல், சளி அதிகமாக உள்ளதால் தனக்கு கரோனா தொற்று வந்திருக்குமோ என்ற பயத்தில் மருமகள் இவரிடம் பேசுவது கிடையாது என்றும், பேரக் குழந்தைகளையும் இவரிடம் பேச அனுமதிக்காமல் வீட்டிற்குள்ளேயே வைத்திருப்பதாகவும், இதனால் தனக்கு மன உளைச்சலாக உள்ளது என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே அந்தப் பெரியவர் மனது உடைந்து அழத்தொடங்கிவிட்டார்.

யாருமே தன்னிடம் பேசாமல் இப்படி தனிமைப்படுத்தப்பட்ட சூழ்நிலையில் தன்னால் வீட்டில் இருக்க முடியவில்லை, அதனால் தன்னை ஏதாவது ஒரு முதியோர் இல்லத்தில் சேர்த்துவிட வேண்டும் எனக் கூறிவிட்டு மீண்டும் அவர் கண்கலங்கினார். அவருக்கு ஆறுதலும் தேறுதலும் சொன்ன ஆய்வாளர் சதீஷ், “கவலைப்படாதீங்க, என்னோட வாங்க, மொதல்ல உங்க மருமகளின் அச்சத்தைப் போக்க அரசு மருத்துவமனையில் போய் உங்களுக்குக் கரோனா பரிசோதனை செய்துவிட்டு அப்படியே வீட்டில் கொண்டுபோய் விடுகிறேன். உங்கள் மருமகளிடமும் நானே பேசுகிறேன்” என்று சொல்லியிருக்கிறார்.

இதைக் கேட்டுப் பதறிப்போன பெரியவர், “ஜீப்பெல்லாம் வேண்டாம் சார், என் மகன், மகளைப் பத்தி மத்தவங்க தப்பா நினைப்பாங்க” என்று அந்த நிலையிலும் தனது மகன், மருமகளின் கவுவரம் பற்றிக் கவலைப்பட்டிருக்கிறார். இதனால் சீருடை கூட அணியாமல் சாதாரண உடையுடன் தனது இருசக்கர வாகனத்தில் பெரியவரை அழைத்துச் சென்ற சதீஷ், அரசு மருத்துவமனையில் அவருக்கு கரோனா முதல்கட்டப் பரிசோதனை செய்து அறிகுறிகள் எதுவும் இல்லை என்ற அரசு மருத்துவரின் சான்றோடு பெரியவரை அவரது வீட்டிற்கு அழைத்துச் சென்றிருக்கிறார்.

அங்கிருந்த பெரியவரின் மருமருகளிடம் அரை மணி நேரத்துக்கும் கூடுதலாக சதீஷ் பேசியதில் கரோனா குறித்த அச்சம் மருமகளுக்கு விலகியது. மாமனாரின் பரிதாப நிலை புரிந்தது. மாமனாரைப் பார்த்து "சாரி மாமா" என்று சொல்லிக் கதறி அழுதிருக்கிறார். பேரக் குழந்தைகளும் தாத்தாவை ஓடிவந்து கட்டிப் பிடித்திருக்கிறார்கள்.

இப்போது அந்தப் பெரியவர் வீட்டுக்குள் பேரப் பிள்ளைகளுடன் ஒன்றாக அமர்ந்து சாப்பிடுகிறாராம். பேரப் பிள்ளைகள் எப்போதும் தன்னை விட்டுப் பிரிவதில்லை, மருமகளும் அன்பாக நடந்து கொள்கிறார் என்று ஆய்வாளர் சதீஷை அலைபேசியில் அழைத்து நன்றி கூறியிருக்கிறார் பெரியவர்.



# சென்னையில் கூடுதல் ஆணையர் உள்ளிட்ட மேலும் இரண்டுஉயர் அதிகாரிகளுக்கு கரோனா தொற்று

**சென்னையில் கரோனா தொற்று தீவிரமாகப் பரவி வரும் நிலையில் கரோனா தொற்றுக்கெதிரான போரில் முன் படைவரிசை வீரர்களான காவல்துறையைச் சேர்ந்த கூடுதல் ஆணையர் உள்ளிட்ட மேலும் 2 உயர் அதிகாரிகளுக்கு கரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**

தமிழகம் முழுவதும் கரோனா தொற்று தீவிரமாகப் பரவி வருகிறது. இதில் கோயம்பேடு சந்தைக்குச் சென்று வந்தோர், அங்குள்ள தொழிலாளர்கள் புலம் பெயர்ந்தது காரணமாக தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் தொற்று எண்ணிக்கை வேகமாகப் பரவி வருகிறது.

சென்னை, கடலூர், திருவள்ளூர், விழுப்புரம், காஞ்சிபுரம் உள்ளிட்ட வடக்கு மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு நாளுக்கு நாள் எண்ணிக்கை கூடி வருகிறது. சென்னை ஆரம்பத்தில் 100, 200 என்கிற எண்ணிக்கையில் இருந்து 1000 என்கிற எண்ணிக்கையை அடைய வெகுநாள் ஆனது. ஆனால் அதன் பின்னர் 500, 300, 200 என்கிற எண்ணிக்கை நாள்தோறும் வருவதால் சென்னை, தமிழகத்தின் மொத்த எண்ணிக்கையில் 46 சதவீதத் தொற்றுள்ளோர் எண்ணிக்கையைக் கொண்டுள்ளது.

கரோனா தொற்று சென்னையில் பொதுமக்களை மட்டுமல்ல, கரோனா நோய்த்தொற்று தடுப்புப் பணியில் முன்னணிப் படைவரிசை வீரர்களான மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்கள், செவிலியர்கள், காவல்துறையினரை அதிகம் பாதித்துள்ளது.

அதிலும் அதிகமாக பொதுமக்களைக் கட்டுப்படுத்தும் பணியில், பாதுகாப்புப் பணியில் இருந்த காவலருக்கும், காவல் உயர் அதிகாரிகளுக்கும் கரோனா தொற்று அதிகரித்துள்ளது. கரோனா பாதுகாப்புப் பணியின் ஆரம்பத்திலேயே காவல் ஆணையர் 50 வயதுக்கு மேற்பட்டோர், வாழ்நாள் நோய் உள்ளவர்கள் தங்களைப் பாதுகாப்புப் பணியிலிருந்து விடுவித்து வீட்டில் ஓய்வெடுக்கலாம் என உத்தரவிட்டார்.

நல்ல உடல் நலத்துடன் இருப்பவர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். ஆனாலும் ஆங்காங்கு ஒரு சிலருக்கு கரோனா தொற்று பரவ ஆரம்பித்தது. பின்னர் உதவி ஆய்வாளர் அளவில் பரவ ஆரம்பித்த நிலையில் சமீபத்தில் கோயம்பேடு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த துணை ஆணையருக்கு கரோனா தொற்று ஏற்பட்டு அவர் ஓய்வெடுத்து வருகிறார்.

இந்நிலையில் சென்னையில் கடந்த சில நாட்களாக உயர் அதிகாரிகள் சிலருக்கும் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. வடக்கு மண்டலத்தில் உள்ள உதவி ஆணையர் ஒருவருக்கு கடந்த வாரம் கரோனா தொற்று ஏற்பட்டது. இந்நிலையில் மேலும் 2 உயர் அதிகாரிகளுக்கும் ஒரு உதவி ஆணையருக்கும் கரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

உயர் அதிகாரிகளில் ஒருவர் சட்டம் ஒழுங்கைக் கவனிக்கும் கூடுதல் ஆணையர், மற்றொருவர் தெற்கு மண்டலத்தில் உள்ள துணை ஆணையர் ஆவார். இதுதவிர சென்னையில் 4 காவல் ஆய்வாளர்களுக்கும், காவல் ஆணையர் அலுவலகத்தில் பணியாற்றும் ஒரு ஆய்வாளருக்கும் தொற்று உறுதியானதாக தகவல் வெளியாகியுள்ளது.

உதவி ஆய்வாளர்கள், காவலர்கள் ஆயுதப்படைக் காவலர்கள் என நூற்றுக்கணக்கான போலீஸார் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர். அவர்களது குடும்பத்தாரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். ஆனாலும் காவலர்கள் தமது பணியைச் செவ்வனே செய்து வருகின்றனர்.

# வெளிமாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் சிக்கித் தவிக்கும் தமிழர்களை மீட்க வேண்டும்

"கரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கின் காரணமாக வெளி மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் சிக்கித் தவிக்கும் தமிழர்களை மீட்டு, தமிழகத்துக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட்டு வருகின்றன. அதேநேரத்தில் மகாராஷ்டிரா மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் சிக்கித் தவிக்கும் தமிழர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்படாதது வருத்தமளிக்கிறது.

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டத்தைச் சேர்ந்த பெண்கள் உட்பட 216 பேர் வேலை தேடி கடந்த சில மாதங்களுக்கு முன் மகாராஷ்டிராவுக்கு சென்றுள்ளனர். மகாராஷ்டிராவின் பால்கார் மாவட்டத்தில் உள்ள கிழக்கு வாசை பகுதியில் வேலை செய்து வந்த அவர்கள், கரோனா ஊரடங்கு காரணமாக வேலைகளை இழந்து தவித்து வருகின்றனர். வாழ்வாதாரத்தை இழந்து, அடுத்த வேலை உணவுக்குக் கூட வழியின்றி தவிக்கும் அவர்கள், சொந்த ஊருக்குத் திரும்ப நினைத்தாலும் அது சாத்தியமாகவில்லை.

வெளிமாநிலங்களில் சிக்கித் தவிக்கும் தமிழர்களை மீட்பதற்காக தமிழக அரசு அறிவித்த இணையதளத்தில் அவர்கள் பதிவு செய்துள்ளனர். ஆனால், அவர்களை அழைத்து வர எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. அதிகாரிகளிடம் உதவி கேட்ட போது, 216 பேருக்காக தனி ரயில் இயக்க முடியாது என்று கூறி விட்டனர்.

அதைத் தொடர்ந்து, மகாராஷ்டிராவில்



உள்ள தமிழர்களை அழைத்து வருவதற்கான தமிழக அரசின் பொறுப்பு அதிகாரியான பூஜா குல்கர்னியை தொடர்பு கொண்டு கேட்ட போது, ஏதேனும் பேருந்துகளை ஏற்பாடு செய்தால், அவற்றுக்கு அனுமதிச் சீட்டு வழங்கப்படும் என கூறிவிட்டதாக தெரிகிறது.



வாசை நகரிலிருந்து திருவண்ணாமலைக்கு 216 பேரும் பயணிக்க வேண்டும் என்றால் பேருந்து வாடகையாக மட்டும் ரூ.8 லட்சம் செலுத்த வேண்டும் என்று கூறப்படுகிறது. பிழைப்பு தேடி மகாராஷ்டிராவுக்குச் சென்று ஊர் திரும்ப வழியின்றி தவிக்கும் ஏழை மக்கள் அவ்வளவு தொகைக்கு எங்கு செல்வர்?

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரையும் தொடர்பு கொண்ட மக்கள் தங்களின் நிலையை எடுத்துக் கூறி, சொந்த ஊர் திரும்ப உதவும்படி கோரியுள்ளனர். அவரும் பேருந்து வாடகைக்கு நன்கொடையாளரை ஏற்பாடு செய்வதாக உறுதியளித்துள்ளார். ஆனால், அதில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. அதனால் அடுத்து என்ன செய்வது, எப்படி சொந்த ஊருக்கு திரும்புவது என்பது தெரியாமல் அவர்கள் தவித்து வருகின்றனர்.

அவர்கள் தங்கியுள்ள வாசை நகரம் நெரிசல் மிகுந்ததாகும். அதுமட்டுமின்றி, அப்பகுதியை உள்ளடக்கிய பால்கர் மாவட்டத்தில் கரோனா வைரஸ் தாக்குதல் மிகவும் அதிகமாக உள்ளது. இதற்கெல்லாம் மேலாக தங்குவதற்கு இடமின்றி தவிக்கும் அவர்கள், அங்குள்ள தாழ்வான பகுதிகளில் கூடாரம் அமைத்துத் தங்கி உள்ளனர்.



அடுத்த சில நாட்களில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து விடும் என்றும், அவ்வாறு நடந்தால் அவர்களின் உடைமைகள் அனைத்தும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படலாம் என்று கூறப்படுகிறது. ஆகவே, அவர்களை அடுத்த சில நாட்களில் அங்கிருந்து மீட்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதேபோல், மும்பை மாநகரின் மாஹிம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் குடிசை அமைத்து தங்கியுள்ள திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 800க்கும் மேற்பட்ட மக்களும் தங்களை சொந்த ஊர்களுக்கு அழைத்துச் செல்லும்படி தமிழக அரசை வேண்டியுள்ளனர்.

மும்பையில் அடுத்த சில நாட்களில் பருவமழை தொடங்கி விடும் என்பதால், உடனடியாக அவர்களை மீட்காவிட்டால் மிக அதிக பாதிப்புகள் ஏற்பட்டு விடக்கூடும். திருவண்ணாமலை மாவட்ட மக்கள் தங்கியிருக்கும் வாசை நகரம் மும்பையிலிருந்து 70 கி.மீ. தொலைவில் தான் உள்ளது.

அதனால் அவர்களை அங்கிருந்து மும்பைக்கு அழைத்துச் சென்று அங்கிருந்து அவர்களையும், மும்பையில் ஏற்கெனவே தவித்து வரும் 800 பேரையும் ரயில் மூலம் தமிழகத்திற்கு அனுப்பி வைக்க முடியும். அதற்கான வாய்ப்புகளை ஆராய வேண்டும்.

அதிகாரிகள் நிலையில் பல முறை வலியுறுத்தியும் மகாராஷ்டிராவில் வாழும் மக்களை மீட்டு அழைத்து வர நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. எனவே, இந்த விஷயத்தில் தமிழக முதல்வரே நேரடியாக தலையிட்டு, மகாராஷ்டிராவில் தவிக்கும் தமிழர்களை தமிழகம் அழைத்து வர நடவடிக்கை எடுக்க வேண்டும்" என ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

# பீதியூட்டும் உண்மையை மறைக்கிறதா சீனா?



## 1.5 கோடி பேர் எங்கே போனார்கள்?

**கொரோனா வைரசால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை குறித்து சீன அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக வெளியிட்ட தகவல் உண்மையாக இருக்காது என்றும் பலியானவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்றும் உலக நாடுகள் பலவும் சந்தேகப்படும் நிலையில் அந்த சந்தேகத்தை ஊர் ஜிதப்படுத்தும் வகையில் புள்ளி விவரம் ஒன்று வெளியாகி பீதியை கிளப்பியுள்ளது.**

நியூயார்க்கில் வசிக்கும் ஹாங்காங்கைச் சேர்ந்த ஜெனிபர் ஜெங் என்பவர் வெளியிட்டிருக்கும் புதிய புள்ளி விவரங்களை உண்மையிலேயே கதிகலங்கச் செய்கிறது.

அவர் சீன நாட்டில் செல்போன் சேவைகளை வழங்கி வரும் 3 நிறுவனங்களின் புள்ளி விவங்களை மேற்கோள்காட்டி சீனாவில் கொரோனா வைரசுக்கு பலியானவர்களின் எண்ணிக்கை சீன அரசு கூறியதை விட பலமடங்கு கூடுதலாக இருக்கும் என்று தெரிவிக்கிறார்.

சமூக ஊடகத்தில் ஜெனிபர் ஜெங் வெளியிட்டுள்ள தகவல்கள்:

• 'சைனா மொபைல்' நிறுவனம் மட்டும் கடந்த ஜனவரி மாதம் 8.116 மில்லியன் (81 லட்சம்) வாடிக்கையாளர்களை இழந்திருப்பதாக தெரிவித்துள்ளது. இந்த மொபைல் போன் பயனீட்டாளர்கள் இப்போது எங்கு இருக்கிறார்கள்? அவர்கள். வேறுமொபைல் சேவை நிறுவனத்துக்கு மாறிவிட்டார்களா? அல்லது மொபைல் போன் எடுத்துச் செல்ல முடியாத உலகத்துக்கு சென்று விட்டார்களா?



• சீனாவின் மற்றொரு மிகப்பெரிய மொபைல் போன் சேவை நிறுவனமான 'சைனா யூனிகார்ன்'. கடந்த ஜனவரியில் 1மில்லியன்(10லட்சம்) வாடிக்கையாளர்கள் இழந்துள்ளது. இந்த வாடிக்கையாளர்கள் எங்கு சென்றார்கள்?

• 'சைனா டெலிகம் யூனிகேஷன்ஸ்' என்ற மற்றொரு மொபைல் போன் சேவை நிறுவனம் பிப்ரவரியில் 5.6 மில்லியன் வாடிக்கையாளர்களை இழந்துள்ளது.

• இந்த மூன்று மொபைல் சேவை நிறுவனங்களும் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் 1.46 கோடி வாடிக்கையாளர்களை இழந்துள்ளன. இந்த வாடிக்கையாளர்கள் திடீரென மாயமானது எப்படி?. அவர்கள் கொரோனா வைரசுக்கு பலியாகி விட்டார்களா? இதுதான் இப்போதைய முக்கிய கேள்வி?

ஆனால், இந்த கேள்விகளுக்கு சீன அரசிடம் இருந்து இதுவரை எந்த விளக்கமும் வெளியிடப்படவில்லை. கொரோனா வைரசுக்கு 3.270 மட்டுமே பலியானாதாக சீன அரசு தொடர்ந்து கூறி வருவது குறிப்பிடத்தக்கது.




# கரோனா வைரஸை எதிர்த்துப் போராட இந்தியாவுக்கு உலக வங்கி 1 பில்லியன் டாலர் அளிக்க ஒப்புதல்

கரோனா காலத்தில் கஷ்டப்படும் ஏழைகள் மற்றும் நலிவுற்றோர் வீடுகளுக்கு உதவிகரமாக 'இந்தியாவின் சமூகப் பாதுகாப்பு முடுக்குதல் திட்டம்' என்ற திட்டத்தின் கீழ் உலக வங்கி 1 பில்லியன் டாலர்கள் அதாவது 100 கோடி டாலர்கள் அளிக்க ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதன் மூலம் இந்திய கோவிட்19 வைரஸ் தாக்குதலுக்கான நிதியுதவி உலகவங்கியின் மூலம் 2 பில்லியன் டாலர்களாகும்.

கரோனா பலி எண்ணிக்கை 3 லட்சத்தையும் கடந்து விட்டது, பாதிப்பு எண்ணிக்கை 45,41,184 ஆக அதிகரித்துள்ளது, உலகம் முழுதும் 200க்கும் மேற்பட்ட நாடுகளில் பொருளாதாரம் லாக் டவுன் உள்ளிட்ட நடவடிக்கைகளினால் முடங்கியுள்ளது.

குறிப்பாக அமைப்புசாரா தொழிற்துறைகளில் பெரிய அளவில் வேலையிழப்பும் பிற பாதிப்புகளும் ஏற்பட்டுள்ளது, லாக்டவுனில் உள்ள மிகப்பெரிய பொருளாதாரங்களின் இந்த நிலைக்கு இந்தியாவும் விதிவிலக்கல்ல.

1 பில்லியன் டாலரில் 550 மில்லியன் டாலர்கள் தொகை பன்னட்டு வளர்ச்சி கூட்டமைப்பு கடனாக வழங்குகிறது. 200 மில்லியன் டாலர்கள் மறுகட்டுமானம் மற்றும் வளர்ச்சிக்கான பன்னட்டு வங்கி அளிக்கும் கடன் ஆகும். கடனை திருப்பிச் செலுத்தும் காலம் 18.5 ஆண்டுகள் ஆகும், கூடுதல் சலுகை காலம் 5 ஆண்டுகள் வழங்கப்படுகிறது.

மீதமுள்ள 250 மிலியன் டாலர்கள் ஜூன்30ம் 2020க்குப் பிறகு கிடைக்கப் பெறும்.

# கரோனா தொற்று அதிகரிப்பு



**சென்னையில் கரோனா தொற்று அதிகரிக்க காரணம் அரசின் கோரிக்கையை அங்கிருக்கின்ற வியாபார நிர்வாகிகள் தங்கள் தொழில் பாதிக்கப்பட்டு விடும் என்ற அச்சத்தின் காரணமாக அவர்கள், அரசால் தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட காய்கறி மார்க்கெட் செல்ல மறுத்ததே காரணம் என முதல்வர் தெரிவித்துள்ளார்.**

“இன்றைக்கு சென்னையை பொறுத்தவரைக்கும், நோய் பரவுவற்கு காரணம் நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல சென்னை மாநகரம் அதிகமாக மக்கள் வசிக்கின்ற பகுதியாக இருக்கின்றது. சென்னை மாநகராட்சியில் மட்டும் 26 லட்சம் பேர் குடிசைப் பகுதியிலே வசித்து வருகின்றார்கள். நெருக்கமான பகுதி, குறுகலான தெரு, அதிகமான மக்கள் வசிக்கின்றார்கள். ஆகவே, எளிதில் நோய் தொற்று ஏற்படுகின்ற சூழ்நிலை உள்ளது.

அதுமட்டுமல்லாமல், சென்னையில் உள்ள கோயம்பேடு மார்க்கெட் ஆசியாவிலேயே மிகப்பெரிய மார்க்கெட். 1996ஆம் ஆண்டு






# கோயம்பேடு வியாபாரிகள், சங்க நிர்வாகிகளே காரணம்

துவக்கப்பட்டு, 3941 கடைகள் இங்கே இயங்கி கொண்டிருக்கின்றன. இந்த மார்க்கெட்டில் சுமார் 20,000 பேர் பணிபுரிந்து வருகின்றார்கள். அதிலே வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள், லாரிகளில் வருகின்ற சரக்குகளை இறக்குகின்ற தொழிலாளர்கள், சில்லறை வியாபாரிகள் கொண்டு வருகின்ற வாகனங்களுக்கு காய்கறிகளை ஏற்றக்கூடிய தொழிலாளர்கள் என சுமார் 20,000 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள்.

இங்கு தொற்று ஏற்படும் என்று ஏற்கனவே நம்முடைய உயரதிகாரிகளின் அறிவுறுத்தலின் சிஎம்டிஏ அதிகாரிகள் வியாபாரிகள் சங்க நிர்வாகிகளோடு பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இங்கே அதிகமான பேர் குழுமியிருக்கின்ற காரணத்தினாலே நோய் தொற்று ஏற்பட்டுவிடும், ஆகவே அரசு உங்களுக்கு மாற்று இடம் ஏற்பாடு செய்து கொடுக்கும், நீங்கள் தற்காலிக மார்க்கெட் அமைக்கக்கூடிய பகுதியிலே சென்று காய்கறி விற்பனைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

ஆனால் வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் அதற்கு மறுப்பு தெரிவித்து விட்டனர். நாங்கள் இங்கேதான் வியாபாரம் செய்ய முடியும். ஏனென்றால் வேறு பகுதியிலே சென்று விற்பனையை துவங்கினால் மிகுந்த நஷ்டத்திற்கு உள்ளாகிவிடுவோம் என்ற அச்சத்தின் காரணமாக அவர்கள் சென்னைக்கு வெளியிலே அரசால் அமைக்கக்கூடிய தற்காலிக மார்க்கெட்டிற்கு செல்ல விரும்பவில்லை.

தொடர்ந்து பலமுறை பேச்சுவார்த்தை நடைபெற்றது. துணை முதல்வர் நேரடியாக கோயம்பேடு மார்க்கெட்டிற்கு சென்று அங்கிருக்கின்ற நிலவரத்தை பார்வையிட்டார்கள். அப்பொழுதும் அங்கே இருக்கின்ற சங்க நிர்வாகிகளிடத்திலே, இங்கே அதிக அளவிலேயே மக்கள் கூடுகின்றார்கள், ஆகவே தொற்று ஏற்பட்டுவிடும்.

தேர்வு செய்யப்படுகின்ற தற்காலிக மார்க்கெட்டிற்கு நீங்கள் சென்றால் உங்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும், தொற்றை தடுக்க முடியும் என்று அவர்கள் எடுத்து சொன்னார்கள். ஆனால் அவர்கள் அதை பொருட்படுத்தவில்லை.



அதுமட்டுமல்லாமல் தொடர்ந்து அரசு முயற்சி செய்து வந்தது. துணை முதல்வர் தலைமைச் செயலகத்திலே அவருடைய அறையிலே வியாபாரிகள் சங்க நிர்வாகிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார். வியாபாரிகளும் பாதிப்பார்கள், தொழிலாளர்களும் பாதிப்பார்கள், வருகின்ற மக்களும் பாதிக்கப்படுவார்கள்.

இதையெல்லாம் உணர்ந்து அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு நீங்கள் துணை நிற்க வேண்டும். அரசு தற்காலிக அமைக்கின்ற அந்த மார்க்கெட்டிற்கு நீங்கள் செல்கின்ற போது உங்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும். அதனால் இந்த தொற்று பரவலை தடுக்க முடியும் என்று எடுத்து சொன்னார்கள்.

ஆனால் சங்க நிர்வாகிகள் நாங்கள் அங்கே இருந்து வெளியிலே சென்று வியாபாரம் செய்தால் நஷ்டத்திற்கு ஆளாகிவிடுவோம் என்ற அச்ச உணர்விலேயே அரசு சொல்கின்ற கருத்தை ஏற்கவில்லை. மீண்டும் துணை முதல்வர் கோயம்பேடு சங்க நிர்வாகிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார். இங்கே இருக்கின்ற பிரச்சனையை உணர்ந்து நீங்கள் அரசிற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று அப்பொழுதும் எடுத்து சொன்னார்.

இன்றைக்கு தமிழகம் முழுவதும் இருக்கின்ற காய்கறி கடைகளை நாங்கள் மாற்றி அமைத்திருக்கின்றோம். ஆனால் கோயம்பேடு பகுதியிலே யாரும் முகக்கவசம் அணிவதில்லை, சமூக இடைவெளியை பின்பற்றுவதில்லை. ஆகவே நீங்கள் வேறு இடத்திற்கு மாற்றி சென்றால் தான் இந்த நோய் பரவலை தடுக்க முடியும் என்ற கருத்தை சொன்னார்.

ஆனால் அவர்கள் அதை ஏற்கவில்லை. அரசு ஏற்பாடு செய்யக்கூடிய தற்காலிக காய்கறி கடைக்கு சென்றால் தங்களுடைய தொழில் கடுமையாக பாதிக்கும், அந்த நிலையை தான் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி கொண்டிருந்தார்கள்.

இருந்தாலும் அரசாங்கம் எடுத்து கூறியது. தொற்று பாதிக்கப்பட்டுவிட்டால் ஒட்டுமொத்தமாக கடைகளை மூடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும், இதையெல்லாம் நீங்கள் உணர்ந்து அரசிற்கு ஒத்துழைப்பு கொடுத்து, அரசு ஏற்படுத்துக்கின்ற தற்காலிக மார்க்கெட்டிற்கு சென்றால் இந்த பிரச்சனை தீர்க்கப்படும், நீங்கள் சிறப்பாக வியாபாரம் செய்யலாம், தொற்றும் ஏற்படாமல் இருக்கும் என்ற செய்தியை சொன்னார். ஆனால் அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. மீண்டும் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டது.

அதுமட்டுமல்லாமல் நம்முடைய மாநகராட்சி ஆணையரும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அதோடு இங்கே இருக்கின்ற உயரதிகாரிகள் நம்முடைய காவல்துறை ஆணையாளர் அவர்கள், மாநகராட்சி ஆணையாளர் அவர்கள், வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் அவர்கள், சிஎம்டிஏ அதிகாரிகள் நேரடியாக அங்கே சென்று கூட அவர்களிடத்திலே வலியுறுத்தி சொன்னார்கள்.

நோய் தொற்று ஏற்பட்டுவிட்டால் இங்கே தொழில் செய்து வருபவர்கள் அத்தனைபேரும்

கடுமையாக பாதிக்கப்பட்டுவிடுவீர்கள். ஆகவே, மருத்துவர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்களுடைய ஆலோசனையின்படி தான் நாங்கள் வந்திருக்கின்றோம்.

அத்தனை வியாபாரிகளும், சில்லறை வியாபாரிகளும், தொழில் செய்கின்ற தொழிலாளர்கள் அத்தனைபேருக்கும் எடுத்துச் சொல்லி, நீங்கள் இந்த மார்க்கெட்டை அரசால் வெளியிலே தேர்வு செய்த இடத்திற்கு நீங்கள் சென்றால் இந்த நோய் பரவலை தடுக்க முடியும் என்ற கருத்தை சொன்னார்கள். அதையும் அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள். ஆகவே, இப்படி பலமுறை கோயம்பேடு சந்தை நிர்வாகிகளை அழைத்து அரசு பேச்சுவார்த்தை நடத்தியது.

அரசு கடும் முயற்சி எடுத்தது. ஆனால் வியாபாரிகளை பொறுத்தவரைக்கும் வேறு இடத்திற்குசென்றுமார்க்கெட்டைதுவங்கினால் தங்களுடைய வியாபாரம் பாதிக்கப்பட்டுவிடும், நஷ்டத்திற்கு ஆளாகிவிடும் என்ற எண்ணத்திலே இருந்துவிட்ட காரணத்தினால் தான் இந்த பிரச்சனை ஏற்பட்டது. இன்றைக்கு கோயம்பேட்டில் இருந்து அதிகமான பேர் வெளிமாவட்டத்திற்கு சென்ற காரணத்தினாலே, அந்த மாவட்டங்களிலே நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கின்றது. சென்னையிலும் இந்த எண்ணிக்கை உயர்ந்ததற்கு காரணம் இதுதான்.

அரசைப் பொறுத்தவரைக்கும் இந்த கரோனா வைரஸ் பரவலைத் தடுக்க கடுமையான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பலமுறை கோயம்பேடு மார்க்கெட் சங்க நிர்வாகிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. ஆனால், அங்கு இருக்கின்றவர்கள் தங்களுடைய விற்பனை பாதிக்கப்பட்டு விடும், அதனால் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகிவிடுவார்கள் என்ற எண்ணத்தில் இருந்த காரணத்தினாலே அவர்கள் வேறு இடத்திற்கு செல்ல மறுத்தார்கள்.

இருந்தாலும், அரசு இந்த நோய் பரவல் ஏற்பட்டவுடனேயே அந்த மார்க்கெட் மூடப்பட்டு, அந்த வியாபார சங்கங்களை அழைத்து இனி இங்கே காய்கறி விற்பனை நடக்க அரசு அனுமதிக்காது என்ற செய்தியைச் சொன்னவுடன் அவர்களும் ஒத்துக் கொண்டார்கள்.



திருமழிசை பகுதியிலே மார்க்கெட் அமைக்கப்படும் என்ற செய்தியைச் சொன்னோம். அவர்களும் ஏற்றுக் கொண்டு அந்தப் பகுதிக்கு அவர்கள் ஒத்துழைப்பை நல்கினார்கள். ஆகவே, அரசைப் பொறுத்தவரைக்கும் இந்த நோய் பரவலைத் தடுப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் எடுத்தது. அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை, அதனால் கோயம்பேடு பகுதியிலே நோய் பரவல் அதிகமாக ஏற்பட்டு விட்டது என்று இன்றைக்கு பல ஊடகங்களில், செய்திகளிலும் தவறான செய்திகளை பரப்பி வருகிறார்கள். அது உண்மைக்கு புறம்பானது. நான் சொன்ன செய்திகளின் அடிப்படையிலே பல்வேறு முயற்சிகள் அரசால் எடுக்கப்பட்டது.

ஆனால் அங்கிருக்கின்ற வியாபார நிர்வாகிகள் தங்கள் தொழில் பாதிக்கப்பட்டு விடும் என்ற அச்சத்தின் காரணமாக அவர்கள், அரசால் தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட காய்கறி மார்க்கெட் செல்ல மறுத்தார்கள், இதுதான் உண்மை நிலை என்பதை மக்களுக்கு தெளிவுபடுத்துகின்றேன்".

**இந்திய வங்கிகளில் ரூ.9 ஆயிரம் கோடி கடன் பெற்று லண்டனில் வாழ்ந்து வரும் தொழிலதிபர் விஜய் மல்லையாவை இந்தியாவுக்கு அழைத்து வருவதற்காக மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளில் மிகப்பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.**

இந்தியாவுக்கு அழைத்துச் செல்வதற்கு எதிராக தொழிலதிபர் விஜய் மல்லையா உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் அவரது மனுவை ஏற்க நீதிமன்றம் மறுத்துவிட்டது. இதையடுத்து விஜய் மல்லையாவுக்கு இருந்த 3 சட்ட வாய்ப்புகளும் முடிந்துவிட்டன.

மதுபான ஆலை, விமான நிறுவனம் எனப் பல்வேறு தொழில்களை நடத்திய தொழிலதிபர் விஜய் மல்லையா, பல்வேறு இந்திய வங்கிகளில் ரூ.9 ஆயிரம் கோடி கடன் பெற்று திருப்பிச் செலுத்தாமல் லண்டனுக்குத் தப்பி ஓடினார். அவரைத் தாயகம் அழைத்து வரும் முயற்சியில் மத்திய அரசு தீவிரமாக இறங்கியுள்ளது.

கடந்த 2017ம் ஆண்டு ஏப்ரல் மாதம் விஜய் மல்லையாவை ஸ்காட்லாந்து யார்டு போலீஸார் கைது செய்தபோதிலும் சில மணிநேரத்தில் ஜாமீன் பெற்றார். அப்போதிருந்து ஜாமீனில் வெளியே இருக்கும் மல்லையா நீதிமன்றத்தில் தன்னை நாடு கடத்துவற்கு எதிரான வழக்கைச் சந்தித்து வருகிறார்.




விஜய் மல்லையாவை இந்தியாவுக்கு அழைத்துவரும் பணிகள் லண்டன் உச்ச நீதிமன்றத்தில் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. இந்தியாவுக்கு விஜய் மல்லையாவை அழைத்து வரும் தீவிரப் பணியில் அமலாக்கப் பிரிவினர், சிபிஐ அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

ஏற்கெனவே லண்டன் வெஸ்ட் மினிஸ்டர்ஸ் மாஜிஸ்திரேட்

## விஜய் மல்லையாவுக்கு அனைத்து சட்ட வாய்ப்புகளும் முடிந்தன

# இந்திய அரசு சார்பில் மல்லையாவைத் தாயகம் அழைத்து வரலாம்

நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மல்லையா மனுத்தாக்கல் செய்தார். மனுவை விசாரித்த லண்டன் உயர் நீதிமன்றம், மல்லையாவை நாடு கடத்தத் தடையில்லை எனக் கடந்த ஏப்ரல் 20ம் தேதி தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பு வந்த 20 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்ய வேண்டும் என்பதால், உச்ச நீதிமன்றத்தில் மல்லையா மேல்முறையீடு செய்திருந்தார். இந்த மனுவை விசாரித்த இங்கிலாந்து உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றத்தின் உத்தரவுக்குத் தடை விதிக்க மறுத்துவிட்டது.

இதையடுத்து, இந்தியாவுக்கு அழைத்துச் செல்வதைத் தடுக்க மல்லையாவுக்கு இருந்த கடைசி சட்ட வாய்ப்பும் முடிந்துவிட்டது. இதையடுத்து, அடுத்த 28 நாட்களுக்குள் இந்திய அரசு சார்பில் மல்லையாவைத் தாயகம் அழைத்துவரும் பணிகளைத் தொடங்கலாம்.



இந்தியாவுக்கு ஆதரவாக வாதாடிய சிபிஎஸ் சட்ட அலுவலகம் சார்பில் கூறுகையில், "தன்னை நாடுகடத்தும் உத்தரவுக்கு எதிராக விஜய் மல்லையா தாக்கல் செய்த மனுக்கள் 3 நீதிமன்றத்திலும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. இந்த விவகாரத்தில் இந்தியாவின் கருத்து ஏற்கெனவே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது" எனத் தெரிவிக்கப்பட்டது

இப்போது மல்லையாவுக்கு இருக்கும் ஒரே வாய்ப்பு ஐரோப்பாவின் மனித உரிமை நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்து தனது நாடு கடத்தும் திட்டத்தை ஒத்திவைக்கலாம். அதாவது தனக்கு நேர்மையான முறையில் விசாரணை நடக்கவில்லை, மனித உரிமை பாதிக்கப்பட்டுள்ளது என்று குற்றச்சாட்டைக் கூறி மல்லையாவால் நிறுத்தப்படலாம்.

ஆனால், ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றத்தில் குற்றச்சாட்டை நிரூபிப்பது எளிதானது அல்ல என்பதால் இதில் மல்லையா வெற்றி பெற மிகக்குறைவான வாய்ப்புதான் இருக்கிறது. விஜய் மல்லையாவின் வாதம் அனைத்தும் லண்டன் நீதிமன்றத்தில் தோல்வி அடைந்தது கணக்கில் கொள்ளப்பட்டால் அது சிக்கலாக மாறிவிடும்.

ஆதலால், விஜய் மல்லையாவை இந்தியாவுக்கு அழைத்துவரும் சிபிஐ, அமலாக்கப் பிரிவின் நடவடிக்கையில் இது முக்கிய மைல்கல்லாகும்.

இந்த சூழலில் கரோனா வைரஸ் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்த கொண்டுவரப்பட்ட லாக்டவுனால் இந்தியப் பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. இதையடுத்து, பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் முயற்சியாக ரூ.20 லட்சம் கோடிக்கான பொருளாதார மீட்புத் திட்டத்தை பிரதமர் மோடி அறிவித்தார்.

இதைத் தொழிலதிபர் விஜய் மல்லையா தனது ட்விட்டர் பக்கத்தில் பாராட்டியுள்ளார். மேலும், தன்னுடைய கோரிக்கையையும் மத்திய அரசு ஏற்று வழக்குகளைக் கைவிட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

விஜய் மல்லையா ட்விட்டரில் பதிவிட்ட கருத்தில், "கரோனா வைரஸிலிருந்து பொருளாதாரத்தை மீட்க இந்திய அரசு ரூ.20 லட்சம் கோடிக்கான திட்டங்களை அறிவித்ததமைக்கு நான் வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன். இந்திய அரசு அவர்களின் தேவைக்கு ஏற்றார்போல் ரூபாய் நோட்டுகளை அச்சிடலாம்.

ஆனால், என்னைப் போன்ற சிறு பங்களிப்பாளர் 100 சதவீதம் கடனை வங்கிகளிடம் திருப்பிச் செலுத்துகிறேன் எனப் பலமுறை கோரிக்கை விடுத்தும் தொடர்ந்து புறந்தள்ளப்படுகிறது.

நான் வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய அனைத்துக் கடன்களையும் செலுத்திவிடுகிறேன். நிபந்தனையில்லாமல் ஏற்றுக்கொண்டு, எனக்கு எதிரான வழக்குகள் அனைத்தையும் கைவிடுங்கள் என மத்திய அரசிடம் கேட்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

உச்ச நீதிமன்றத்தில் தனக்குப் பாதகமான தீர்ப்பு கிடைக்கும் என்பதால், முன்கூட்டியே பிரதமர் மோடியின் திட்டத்தைப் பாராட்டி, கடனைச் செலுத்தி விடுகிறேன் என்று ட்விட்டரில் விஜய் மல்லையா பதிவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது



# 2.7 கோடி இளைஞர்கள் வேலையிழப்பு

**சிஎம்ஐஇ நடத்திய ஆய்வில் தகவல்**

**ஊரடங்கு உத்தரவால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் (சிஎம்ஐஇ) ஆய்வு நடத்தி வந்தது. இதுகுறித்து சிஎம்ஐஇ வெளியிட்டுள்ள வார அறிக்கையில் கூறியிருப்பதாவது:**

மே 10ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் நாட்டில் வேலையின்மை விகிதம் 27.1 சதவீதத்திலிருந்து 24 சதவீதமாகக் குறைந்துள்ளது. தொழிற்சாலைகளைத் திறக்க அனுமதித்துள்ளதால் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 36.2 சதவீதத்திலிருந்து 27.6 சதவீதமாக உயர்ந்துள்ளது.

கடந்த ஏப்ரலில் ஊரடங்கு உத்தரவின்போது 20 முதல் 29 வயதில் உள்ள சுமார் 2.7 கோடி இளைஞர்கள் வேலை இழந்துள்ளனர். நாடு முழுவதும் 20 முதல் 24 வயதில் உள்ள 3.42 கோடி பேர் வேலைபார்த்து வந்தனர். இது ஏப்ரலில் 2.09 கோடியாகக் குறைந்தது. 1.3 கோடிக்கும் அதிகமான இளைஞர்கள், இளம்பெண்கள் வேலையை இழந்தனர். அதேபோல 25 முதல் 29 வயதுக்குள்பட்ட 1.4 கோடி பேர் வேலை இழந்தனர்.

அதேபோல 30 முதல் 39 வயதில் உள்ள 3.3 கோடி பேர் வேலை இழந்துள்ளனர். இதில் 86 சதவீதம் பேர் ஆண்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. இதுகுறித்து சிஎம்ஐஇ நிர்வாக இயக்குநர் மகேஷ் வியாஸ் கூறும்போது, "இளைஞர்கள் வேலைவாய்ப்பை இழப்பதால் அவர்களது சேமிப்பில் இது பாதிப்பை ஏற்படுத்தும். எதிர்காலத்தில் இது அவர்களுக்கு சிக்கலை உண்டாக்கும். வாங்கிய கடனை திருப்பிச் செலுத்துவதில் சிக்கல் ஏற்படும். கடன் தொடர்பான குற்றங்கள் அதிகரிக்க வாய்ப்புள்ளது" என்றார்.

# பழவியாபாரிகளிடம் அதிகார அத்துமீறல்

**வா**ணியம்பாடியில் நடவடிக்கை என்ற போர்வையில் பழவியாபாரிகள் கடைகளை சூறையாடிய நகராட்சி ஆணையர் கடும் எதிர்ப்பு காரணமாகவும், மனித உரிமை ஆணைய வழக்கு காரணமாகவும் காத்திருப்போர் பட்டியலுக்கு தூக்கியடிக்கப்பட்டுள்ளார்.

சமூக வலைதளங்களில் வெளியான காணொலி தமிழகத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது. அந்தக்காணொலியில்வாணியம்பாடி உழவர்சந்தை அருகில் உள்ள சி.எல்.சாலை பகுதியில் நகராட்சி ஆணையர் சிசில் தாமஸ் நடந்துக்கொண்ட விதம் பதிவாகியிருந்தது.

சாதாரண விளிம்பு நிலையில் உள்ள மார்க்கெட் பழ வியாபாரிகள் பழம் அடுக்கி வைத்திருந்த மேடையை தட்டி விட்டு சாலையில் வீசி எரிவதும், பழக்கடை தள்ளுவண்டியை பழத்தோடு சாலையில் சாய்த்ததும், பழங்களை அள்ளி சாலையில் வீசுவதும் சினிமாவில் சண்டைக்காட்சிகளில் வில்லன்கள் செய்வது போன்று ஒரு காட்சி நல்லெண்ணம் கொண்ட அனைவரையும் அதிர வைத்தது.

அதிகாரி என்பதால் அவர் தங்களுக்கு ஏற்படுத்திய நஷ்டத்தை சகித்துக்கொண்டு உள்ளூர வெம்பியபடி சாலையில் கொட்டிக்கிடக்கும் பழங்களை அள்ளும் பெண் வியாபாரியை அலட்சியமாக பார்த்தப்படி அந்த அதிகாரி வீர நடை போட்டு செல்லும் காட்சி காண்போரை உஷ்ணப்படுத்தியது.

காணொலியை பார்த்தோர் அந்தக்காணொலியை முதல்வரின் ட்விட்டர் அக்கவுண்டுக்கு டேக் செய்து தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தினர். திமுக மகளிரணி செயலாளர் கனிமொழி தனது ட்விட்டர் பக்கத்தில் காணொலியை



பதிவு செய்து கடும் கண்டனத்தை பதிவு செய்திருந்தார்.

"எளியவர்களிடம் மட்டுமே இவர் போன்றவர்களின் அதிகாரக் கரங்கள் அத்துமீறும். இப்படி உணவுப் பொருட்களை கொட்டிக் கவிழ்க்க இவருக்கு யார் அதிகாரம் தந்தது? இவர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்". என கோபப்பட்டு பதிவிட்டிருந்தார்.

எதிர்ப்பு வலுக்கவே அதிர்ந்துபோன நகராட்சி ஆணையர் உடனடியாக சால்வையுடன் வட்டாட்சியர், டிஎஸ்பி சகிதமாக சென்று அனைத்து வியாபாரிகளிடமும் தனது செயலுக்கு மன்னிப்பு கோரினார். இந்த விவகாரம் ஊடகங்களில் வெளியானதை அடுத்து மாநில மனித உரிமை ஆணையம் தாமாக முன்வந்து வழக்குப்பதிவு செய்து கடுமையாக நோட்டீஸ் ஒன்றை அனுப்பியுள்ளது.

மாநில நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பியுள்ள நோட்டீஸில் மனித உரிமை ஆணையம் பல்வேறு கேள்விகளை எழுப்பி உரிய விளக்கத்தை 2 வார காலத்துக்குள் அளிக்க உத்தரவிட்டுள்ளது.



# மாஸ்டர் தீபாவளிக்கு வெளியாகிறது

**விஜய் நடிப்பில் உருவாகியுள்ள 'மாஸ்டர்' திரைப்படம் தீபாவளிக்கு வெளியாகவுள்ளது.**

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகியுள்ள படம் 'மாஸ்டர்'. தமிழக அரசு இறுதிக்கட்டப் பணிகளுக்கு அனுமதி அளித்துள்ளதால், தற்போது 'மாஸ்டர்' பணிகள் தொடங்கி நடைபெற்று வருகிறது. சேவியர் பிரிட்டோ தயாரித்துள்ள இந்தப் படத்தின் ஒட்டுமொத்த உரிமையையும் லலித் கைப்பற்றியுள்ளார்.

இன்னும் 15 நாட்களுக்குள் 'மாஸ்டர்' படத்தின் ஒட்டுமொத்த பணிகளும் முடிந்துவிடும். ஆனால் தயாரிப்பு தரப்போ முதல் பிரதியை எடுக்க வேண்டாம் என அறிவுறுத்தியுள்ளது. ஏனென்றால் திரையரங்குகள் எப்போது திறக்கும் என்பது தெரியாமல் உள்ளது. அப்படித் திறந்தாலுமே பல்வேறு நடைமுறைகளை தமிழக அரசு பின்பற்றச் சொல்லி அறிவுறுத்தும். இதனால் மக்கள் திரையரங்குகளுக்குக் கூட்டமாக வருவார்களா என்பது கேள்விக்குறி தான்.

இதனாலேயே, 'மாஸ்டர்' படத்தை தீபாவளிக் கொண்டாட்டமாக வெளியிடலாம் என்று படக்குழு முடிவு செய்துள்ளது. இப்போதைக்கு எந்தவொரு அப்டேட், டீஸர், ட்ரெய்லர் உள்ளிட்டவை வேண்டாம் எனவும் முடிவு செய்திருக்கிறார்கள். விஜய் பிறந்த நாளான ஜூன் 22ம் தேதி புதிதாக ஒரு போஸ்டர் மட்டும் வெளியிடலாம் என திட்டமிட்டுள்ளனர்.

'மாஸ்டர்' படத்தில் விஜய் சேதுபதி, மாளவிகா மோகனன், அர்ஜுன் தாஸ், தினா, ரம்யா, கௌரி கிஷன் உள்ளிட்ட பலர் விஜய்யுடன் நடித்துள்ளனர். அனிருத் இசையமைத்துள்ளார். இந்தப் படம் வெளியாவதற்குள், கண்டிப்பாக ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் உருவாகும் படத்தை விஜய் தொடங்கிவிடுவார் என்கிறார்கள்.

# பா.விஜய் இயக்கத்தில்
# ஜீவா - அர்ஜூன்





**பா.விஜய் இயக்கத்தில் உருவாகும் படத்தில் ஜீவா மற்றும் அர்ஜூன் இணைந்து நடிக்கவுள்ளனர்.**

'ஜிப்ஸி' படத்தைத் தொடர்ந்து, தமிழில் 'களத்தில் சந்திப்போம்' மற்றும் இந்தியில் '83' ஆகிய படங்களில் கவனம் செலுத்தி வந்தார் ஜீவா. இவ்விரண்டு படங்களைத் தொடர்ந்து தமிழில் பல்வேறு இயக்குநர்களிடம் கதைகள் கேட்டு வந்தார்.

இறுதியாக பாடலாசிரியர் மற்றும் இயக்குநர் பா.விஜய் சொன்ன கதை மிகவும் பிடித்துவிடவே, அந்தப் படத்தின் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. 'ஸ்ட்ராபெரி' மற்றும் 'ஆருத்ரா' ஆகிய படங்களைத் தொடர்ந்து இந்தப் படத்தை இயக்குகிறார் பா.விஜய்.

சு.ராஜா தயாரிப்பில் உருவாகும் இந்தப் படத்துக்கு 'மேதாவி' எனத் தலைப்பிட்டுள்ளனர். அர்ஜூன் முக்கியக் கதாபாத்திரத்திலும், ராஷி கண்ணா நாயகியாகவும் நடிக்கவுள்ளனர். ஹாரர் த்ரில்லராக இந்தப் படம் உருவாகவுள்ளது.

சாரா, 'கைதி' தினா, ரோபோ ஷங்கரின் மகள் இந்திரஜா சங்கர், ராதாரவி, ஒய்.ஜி.மகேந்திரன், அழகம்பெருமாள், ரோகிணி ஆகியோரும் இந்தப் படத்துக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். யுவன் இசையமைக்க, தீபா குமார் ஒளிப்பதிவு செய்யவுள்ளார். எடிட்டிங் பணிகளை ஷான் லோகேஷ் கவனிக்கவுள்ளார்.



# உருவாகும் 'விண்ணைத்தாண்டி வருவாயா 2'

**'விண்ணைத்தாண்டி வருவாயா 2' உருவாது தொடர்பாக கௌதம் மேனனுக்கு உறுதியளித்துள்ளார் சிம்பு**

கௌதம் மேனன் இயக்கத்தில் சிம்பு, த்ரிஷா நடிப்பில் பெரும் வரவேற்பைப் பெற்ற படம் 'விண்ணைத்தாண்டி வருவாயா'. ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்த இந்தப் படம் 2010ம் ஆண்டு பிப்ரவரி 26ம் தேதி வெளியானது. இந்தப் படத்தின் பாடல்கள், கதையமைப்பு, வசனங்கள் என அனைத்து தரப்பிலும் கொண்டாடப்பட்டது.

இந்தப் படத்துக்குக் கிடைத்த அமோக வரவேற்பால், இதன் 2ம் பாகத்துக்கான கதையை எழுதி முடித்துள்ளார் கௌதம் மேனன். ஆனால், வெவ்வேறு படங்கள் உருவாக்கத்தில் இருந்ததால் 'விண்ணைத்தாண்டி வருவாயா 2' படத்தை தொடாமல் இருந்தார்.

கரோனா ஊரடங்கில் அதிலிருந்து ஒரு பகுதியை மட்டும் எடுத்து குறும்படமாக உருவாக்கியுள்ளார் கௌதம் மேனன். சிம்பு மற்றும் த்ரிஷா இருவரது வீட்டிற்கும் மொபைல் கேமரா உள்ளிட்ட உபகரணங்கள் கொடுத்து அனுப்பியுள்ளார். இருவருக்கு வாட்ஸ்அப்பில் வசனங்களை அனுப்பிவிட்டு, இருவரிடமும் தொலைபேசி வீடியோ காலிலேயே எங்கு கேமரா வைத்து எப்படி ஷூட் பண்ணவேண்டும் என்று கூறியுள்ளார்.

அதன்படி இருவருமே ஷூட் செய்து கௌதம் மேனனுக்கு அனுப்பியுள்ளனர். இதன் எடிட்டிங், பின்னணி இசைக் கோர்ப்பு உள்ளிட்ட பணிகளை சமூக இடைவெளியுடன் நடத்தி வருகிறது படக்குழு. இதற்கு 'கார்த்திக் டயல் செய்த எண்' என்று பெயரிட்டுள்ளது படக்குழு.

இந்தப் படத்துக்காக கௌதம் மேனன் அனுப்பிய வசனங்களைப் படித்தவுடன் அழுதுவிட்டார் சிம்பு. அந்தளவுக்கு வசனங்கள் அவரை ரொம்பவே பாதித்துள்ளது. கௌதம் மேனன் சொன்னபடியே காட்சிகளை எல்லாம் ஷூட் செய்து அனுப்பிவைத்துள்ளார் சிம்பு. பின்பு கௌதம் மேனனை அழைத்து "இந்தக் கதை 'கார்த்திக் டயல் செய்த எண்' என்ற குறும்படத்துடன் நிற்கக் கூடாது. கண்டிப்பாக 'விண்ணைத்தாண்டி வருவாயா 2' பண்ணுங்கள். எப்போது வேண்டுமானாலும் தேதிகள் கேளுங்கள், உடனே கொடுத்து நடிக்கிறேன்" என்று உறுதியளித்துள்ளார் சிம்பு.

# நம்பிக்கை இழந்து விடாதீர்கள்

கரோனா அச்சுறுத்தல் தொடர்பாக காவல்துறையினரைப் பாராட்டி வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார் ஆண்ட்ரியா

தமிழகத்தில் கரோனா அச்சுறுத்தல் என்பது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. குறிப்பாக கோயம்பேடு மார்க்கெட் மூலமாக பரவியதால், அருகிலிருக்கும் மாவட்டங்களுக்கும் பரவி வருகிறது. இதனால், கரோனா பரிசோதனை துரிதப்படுத்தி வருகிறது தமிழக அரசு.

இந்த கரோனா ஊரடங்கிலும் தமிழக காவல்துறையினர் இடைவிடாது பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களது பணிக்கு பலரும் பாராட்டு தெரிவித்து வருகிறார்கள். இதனிடையே காவல்துறையினரில் 75க்கும் அதிகமானோருக்கு கரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இது ஒருவித அச்ச உணர்வை காவல்துறையினர் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

தற்போது காவல்துறையினருக்கு கரோனா தொற்று உறுதியாகியுள்ளதைத் தொடர்ந்து ஆண்ட்ரியா வெளியிட்டுள்ள வீடியோ பதிவில் கூறியிருப்பதாவது:

"நாட்டுக்காகவும், எங்கள் அனைவருக்காகவும் கடினமாக உழைக்கும் உங்கள் அனைவருக்கும் மிக்க நன்றி. வைரஸை எதிர்த்து கடுமையாக போராடு வருகிறீர்கள். நம்பிக்கை இழந்து விடாதீர்கள். எல்லாம் சரியாகும். அனைத்தும் மீண்டும் நல்லபடியாக மாறும் என்று நம்புகிறோம். நன்றி"

இவ்வாறு ஆண்ட்ரியா தெரிவித்துள்ளார்.




# விழுப்புரம் மாணவியை எரித்துக் கொன்றதன் பின்னணி



விழுப்புரம் அருகே பெட்ரோல் ஊற்றி மாணவி தீ வைத்து எரித்துக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக 2 பேரைக் கைது செய்து போலீஸார் நடத்திய விசாரணையில், மரியாதைக் குறைவாகப் பேசியதால் சிறுமியை எரித்தோம் என்று கொலையாளிகள் தெரிவித்துள்ளனர்.

விழுப்புரம் அருகே உள்ள சிறு மதுரை கிராமத்தைச் சேர்ந்தவர் ஜெயபால்.இவரது மகள் 10ம் வகுப்பு படித்து வந்தார். இவரின் பெற்றோர் பக்கத்து ஊருக்கு சென்றிருந்த நிலையில் மாணவி மட்டும் வீட்டில் தனியாக இருந்தார்.



இந்நிலையில் இவர்களின் வீட்டில் இருந்து அதிக அளவில் புகை வெளியேறியதைக் கண்ட அக்கம் பக்கத்தினர் மற்றும் உறவினர்கள் அங்கு சென்றபோது, உடல் முழுவதும் தீப்பற்றி எரிந்த நிலையில் மாணவி வலியால் அலறியுள்ளார். உடனே, அவரை மீட்டு முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.

தகவலறிந்து மருத்துவமனைக்கு வந்த விழுப்புரம் நீதிபதியிடம் மாணவி வாக்குமூலம் அளித்தார். அதே கிராமத்தைச் சேர்ந்த கணபதி மகன் முருகன் (51), கந்தசாமி மகன் யாசகம் என்கிற கலியபெருமாள் (60) ஆகியோர் வீட்டுக்குள் புகுந்து தன் மீது பெட்ரோல் ஊற்றி தீ வைத்து விட்டு தப்பிச் சென்றுவிட்டதாக அவர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், தீவிர சிகிச்சை பிரிவில் இருந்த மாணவி உயிரிழந்தார். அவரது வாக்குமூலத்தின் அடிப்படையில் அதிமுக முன்னாள் கவுன்சிலரின் கணவர் முருகன், அதிமுக கிளைச் செயலாளர் யாசகம் என்கிற கலியபெருமாள் ஆகிய இருவரையும் போலீஸார் கைது செய்து, விசாரணை நடத்தி வருகின்றனர்.

முன்விரோதம் காரணமாக ஜெயபாலை தாக்க வந்தவர்கள் ஜெயபால் வீட்டில் இல்லாததால் அவரது மகளைத் தாக்கி, பெட்ரோல் ஊற்றி எரித்துள்ளனர் என போலீஸார் தெரிவித்தனர்.

மாணவி உயிரிழந்ததால் கொலை முயற்சி வழக்காகப் பதிவு செய்யப்பட்ட வழக்கு கொலை வழக்காக திருவெண்ணெய் நல்லூர் போலீஸார் மாற்றினர்.

கொலை வழக்கில் தொடர்புடைய இருவரும் அதிமுக பிரமுகர்கள் என்பது தெரியவந்தது. இதையடுத்து, கொலை வழக்கில் சிக்கிய இருவரையும் அடிப்படை உறுப்பினர் உட்பட எல்லா பொறுப்புகளில் இருந்தும் நீக்கி அதிமுக தலைமைக் கழகம் உத்தரவிட்டது.

இந்நிலையில், கைது செய்யப்பட்டவர்களிடம் போலீஸார் நடத்திய விசாரணையில், "கடந்த 8 ஆண்டுகளாக அக்குடும்பத்தினருடன் தகராறு இருந்துவந்தது. சமீபகாலமாக ஜெயபால் குடும்பத்தினர் பொருளாதார ரீதியாக முன்னேறி வருகின்றனர். இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு அச்சிறுமி எங்களை மரியாதைக் குறைவாகப் பேசினார்.

இது தொடர்பான தகராறில் ஜெயபால் காவல் நிலையத்தில் எங்கள் மீது புகார் கொடுக்கச் சென்றார். ஜெயபாலை அச்சுறுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் அவர் மகள் மீது பெட்ரோல் ஊற்றித் தீ வைத்தோம்" என்று தெரிவித்துள்ளனர்.




# கரோனாவுக்கு மருந்து கண்டுபிடித்ததாக போலி தகவல் பரப்பிய

# திருத்தணிகாச்சலம் கைது


கரோனாவுக்கு மருந்து கண்டுபிடித்ததாக தகவல் பரப்பிய சித்த மருத்துவமனையை நடத்தி வந்த திருத்தணிகாச்சலத்தை 6 நாள் போலீஸ் காவலில் வைத்து விசாரிக்க சென்னை மத்திய குற்றப்பிரிவினருக்கு சென்னை எழும்பூர் குற்றவியல் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

கரோனா தொற்றுப் பரவலைத் தடுக்க இதுவரை தடுப்பு மருந்து கண்டுபிடிக்காத நிலையில், சித்த மருத்துவமனையை நடத்திவரும் திருத்தணிக்காசலம் என்பவர் தான் மருந்து கண்டுபிடித்துவிட்டதாகக் கூறினார். அது செய்தியாக வெளியானது. இந்நிலையில் முதல்வர் அனுப்பிய நோயாளிகளில் 2 பேரைக் குணப்படுத்தியதாகவும், முதல்வர் மற்றும் உலக சுகாதார நிறுவனம் ஆகியவற்றைக் குறித்த தவறான தகவலை சமூக ஊடகங்களில்



பரப்பியதாகவும் திருத்தணிகாசலத்துக்கு எதிராக குற்றச்சாட்டு எழுந்தது. இவர் சென்னை கோயம்பேடு பேருந்து நிலையம் எதிரில் உள்ள ரத்னா சித்த மருத்துவமனை நடத்தி வந்தார்.

இந்த சூழலில் பொதுமக்களின் நலனுக்கு ஆபத்து ஏற்படுத்தும் விதமாகச் செயல்பட்டு வரும் திருத்தணிகாசலம் மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுக்குமாறு இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி மருத்துவத் துறை இயக்குநர் சார்பில் புகார் அளிக்கப்பட்டது. அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்ட நிலையில் திருத்தணிகாசலம் தலைமறைவானார்.



இந்நிலையில் திருத்தணி அருகே கடந்த வாரம் திருத்தணிகாசலம் கைது செய்யப்பட்டார். அவரைக் கைது செய்த மத்திய குற்றப்பிரிவு போலீஸார் அவர் மீது 188 (அரசு பிறப்பித்த உத்தரவை மீறிச் செயல்படுதல்), Epidemic Diseases Act Sec3- (தொற்றுநோய் தடுப்பு சட்டம்), 505(1)(b) (உள்நோக்கத்தோடு தவறான தகவல்களைப் பரப்புதல்), 153 (A) (பொது அமைதிக்குப் பங்கம் விளைவித்தல்) ஆகிய பிரிவுகளின் கீழும் பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழும் வழக்குப் பதிவு செய்தனர்.

திருத்தணிகாசலத்திடம் விசாரணை நடத்திய சென்னை மத்திய குற்றப் பிரிவின் சைபர் கிரைம் போலீஸார், அவரை எழும்பூர் குற்றவியல் நீதிமன்ற நடுவர் முன் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். இந்நிலையில் திருத்தணிகாசலம் ஆட்டிசம் பாதிக்கப்பட்ட குழந்தைகளைக் குணப்படுத்துவதாகக் கூறி மோசடியில் ஈடுபட்டதாக பெற்றோர்கள் குற்றம் சாட்டியிருந்தனர்.

இந்நிலையில் தனக்கு ஜாமீன் வழங்கக் கோரி திருத்தணிகாசலம் தாக்கல் செய்த மனு நிலுவையில் இருக்கும் நிலையில், அவரை 7 நாள் போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்க மத்திய குற்றப்பிரிவு போலீஸார் குற்றவியல் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தனர்.

இந்த மனு காணொலிக் காட்சி மூலம் எழும்பூர் குற்றவியல் நீதிமன்ற நடுவர் ரோஸ்லின் துரை முன்பு விசாரணைக்கு வந்தது, திருத்தணிகாசலம் முறையாக சித்த மருத்துவம் படித்தவரா, சிகிச்சை அளிப்பதற்கான தகுதி உள்ளதா என்பன உள்ளிட்ட பல கோணங்களில் அவரை விசாரிக்க வேண்டியுள்ளதால் அவரை விசாரிக்க 7 நாள் காவல் வழங்க வேண்டுமென போலீஸ் தரப்பில் வாதிடப்பட்டது.

அப்போது பூந்தமல்லி கிளைச் சிறையிலிருந்து காணொலிக் காட்சி மூலம் ஆஜரான திருத்தணிகாசலம், விசாரணைக்கு இதுவரை ஒத்துழைத்தது போல இனியும் நடக்கத் தயாராக இருப்பதாகவும், ஆனால் காவலில் செல்ல விருப்பமில்லை என்றும் கூறினார். மேலும், தூக்கமின்மை மற்றும் மன அழுதத்தத்தில் இருப்பதால் தனக்கு ஜாமீன் வழங்க வேண்டுமென கோரிக்கை வைத்தார்.

இரு தரப்பு வாதங்களைக் கேட்ட நீதிபதி ரோஸ்லின் துரை, திருத்தணிகாசலத்தை மத்திய குற்றப்பிரிவு போலீஸார் 6 நாட்கள் காவலில் எடுத்து விசாரிக்க அனுமதி அளித்தார்.



# வாழ்வாதாரம் இழந்து தவிக்கும் புகைப்பட, வீடியோ கேமரா கலைஞர்கள்

**நிழற்படக் கலைஞர்களுக்குத் தனி நலவாரியம் இல்லாததால், கரோனா பேரிடர் பாதித்துள்ள இதுபோன்ற காலங்களில் அரசின் சார்பில் பிற தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் நலவாரிய உதவித் தொகை அவர்களுக்கு கிடைப்பது இல்லை. ஆகவே அவர்களுக்கு உதவ வேண்டும் என வைகோ கோரிக்கை வைத்துள்ளார்.**

''கரோனா கொள்ளை நோயால் அனைத்துத் துறைகளிலும் தொழில்கள் முடங்கி, லட்சக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மூன்றாம் கட்டமாக ஊரடங்கு நீட்டிக்கப்பட்டுள்ளதால், தமிழகம் முழுவதும் புகைப்படத் தொழிலை நம்பியுள்ள மூன்று லட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் தங்களுடைய வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்றனர்.



மிகச் சிறிய அளவில் கடை வைத்து வீடியோ மற்றும் புகைப்படம் சார்ந்த தொழில்களைச் செய்து வரும் இவர்களுக்கு ஒரு ஆண்டிற்கு அதிகபட்சம் நான்கு மாதங்கள் மட்டுமே திருமணங்கள் உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் நிழற்படம், ஒளிப்படம் எடுக்க வாய்ப்புகள் கிடைக்கும். பின்னர் மாதத்திற்கு மூன்று அல்லது நான்கு நிகழ்ச்சிகள் கிடைப்பதே அரிதாகும்.

ஒரு நிகழ்ச்சிக்கு வீடியோ மற்றும் நிழற்படம் எடுப்பதற்கும், தொழில்நுட்பப் பணிகளை முடித்துக் கொடுப்பதற்கும் குறைந்தபட்சம் 10 முதல் 15 நாட்கள் ஆகும். ஒரு சிறிய நிகழ்ச்சிக்கு 25 ஆயிரம் வாங்கும் இவர்கள், வீடியோ எடுக்கும் கலைஞருக்கு 2 ஆயிரம் ரூபாயும், நிழற்படம் எடுக்கும் இரண்டு பேருக்கு 4 ஆயிரம் ரூபாயும் ஊதியம் அளிக்கிறார்கள். ஆல்பம், வீடியோ எடிட்டிங், கேமரா வாடகை என்று ரூ.15 ஆயிரம் வரை செலவுகள் ஆகிவிடும். மீதமுள்ள தொகையை வைத்துதான் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும்.

கரோனா நோய்ப் பரவலால் மண்டபங்கள், கோயில்கள் மூடப்பட்டதால் விசேஷ நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டு, கடந்த இரண்டு மாதங்களாக நிழற்படக் கலைஞர்கள் பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

நிழற்படக் கலைஞர்களுக்குத் தனி நலவாரியம் இல்லாததால், கரோனா பேரிடர் பாதித்துள்ள இதுபோன்ற காலங்களில் அரசின் சார்பில் பிற தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் நலவாரிய உதவித்தொகை இவர்களுக்குக் கிடைப்பது இல்லை.

ஒவ்வொரு மனிதரின் வாழ்வையும் ஆவணப்படுத்தி, எதிர்காலத் தலைமுறைக்கு வழங்கும் கடமையைச் செய்து வரும் நிழற்படக் கலைஞர்கள் தங்கள் வாழ்வில் ஒளி இழந்து தவிப்பதைக் கருத்தில் கொண்டு, லட்சக்கணக்கான புகைப்படக் கலைஞர்களுக்கு தமிழக அரசு சிறப்பு உதவித்தொகை வழங்கி அக்குடும்பங்களைக் காப்பாற்ற முன்வர வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்''.

**Owned and Published by M.ABDUL RAHMAN from No.61, Venkata Mesthiri Street, Mannadi, Chennai-600 001 and Printed S.ALI MOHAMED SAYEED by J.M.PROCESS, at 22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-600 014. Editor: S.LOGANAYAGI**



# கொரோனா மனித உரிமை ஆர்வலர்கள்













MANITHA URIMAIGAL MEETPU Tamil Fortnightly, November 1-15-2018
Regd. with the Registrar of News Papers for India under No. TNTAM / 2017 / 74330 / R.Dis.481 / 17



# கரோனா வைரஸ்: ரெம்டெசிவைர் மருந்தை இந்தியாவின் சிப்லா நிறுவனமும் உற்பத்தி செய்ய அனுமதி

**இந்தியாவின் முன்னணி மருந்து உற்பத்தி நிறுவனமான சிப்லா நிருவனம் அமெரிக்காவின் ஜிலீட் சயன்சஸ் நிறுவனத்துடன் உரிம ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. அதாவது கரோனா தொற்றுக்கு பயனுள்ளதாகக் கருதப்படும் ரெம்டெசிவைர் மருந்தை உற்பத்தி செய்து விற்க இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.**

நொய்டாவில் உள்ள ஜூப்ளியன் லைஃப் சயன்ஸஸ் நிறுவனத்தின் கிளை நிறுவனமான ஜூப்ளியண்ட் ஜெனரிக்ஸ் நிறுவனம் ஜிலீட் நிறுவனத்துடன் ரெம்டெசிவைர் உற்பத்திக்கு கையெழுத்திட்ட பின்பு தற்போது பிரபல சிப்லா நிறுவனமும் கையெழுத்திட்டுள்ளது

இந்த ஒப்பந்தத்தின் படி செயல்பூர்வமான மருந்தியல் உட்பொருள் மற்றும் முழுவதும் முடிக்கப்பட்ட தயாரிப்புக்கும் இடமுள்ளது.

ஜிலீட் சயன்சஸ் நிறுவனம் ரெம்டெசிவைர் மருந்தை தயாரிக்கும் முறையை சிப்லாவுக்குத் தெரிவிக்கும்.


அமெரிக்க உணவு மற்றும் மருந்துக் கழகம் நெருக்கடி நிலையில் உள்ள கோவிட் 19 நோயாளிகளுக்கு இதனைப் பயன்படுத்த அனுமதி வழங்கியுள்ளது. அதாவது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட கோவிட் 19 நோயாளிகளுக்கு மட்டும் பயன்படுத்தலாம்.

மிதமானது முதல் தீவிர கரோனா அறிகுறிகள் உள்ள நோயாளிகளுக்கு ரெம்டெசிவைர் கொடுக்கப்பட்டு 3ம் கட்ட ஆய்வுகள் முடிந்த நிலையில் அமெரிக்க கழகம் இதனைப் பயன்படுத்த அனுமதி தந்துள்ளது.

மேலும் ஆய்வுகள் நடந்து வருகின்றன. இது எபோலா வைரஸ் வெடிப்பின் போது சிகிச்சைக்குப் பயன்பட்ட மருந்தாகும்.

# கரோனா வைரஸ் தொற்று பரவலை எளிதில் அடையாளம் காணும் ஆரோக்ய சேது' செயலி

**ஆரோக்ய சேது' செயலி அறிமுகம் செய்யப்பட்ட 41 நாட்களில் அதை பதிவிறக்கம் செய்தோர் எண்ணிக்கை 10 கோடியைத் தாண்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**



கரோனா வைரஸ் தொற்று பரவலை எளிதில் அடையாளம் காணும் வகையில், தொழில்நுட்பத்தின் உதவியைக் கொண்டு இந்த 'ஆரோக்ய சேது' செயலி அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த செயலி நம்மைச் சுற்றியுள்ள பகுதியில், நம்மோடு தொடர்புடைய நபர்களுக்கு கரோனா தொற்று இருக்கிறதா என்பதை தெரிந்துகொள்ள உதவுகிறது. இதன் அடிப்படையில் நாம் கரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பாக இருக்கிறோமா என்பதை உறுதி செய்துகொள்ள முடிகிறது.

'நிதி ஆயோக்' அமைப்பினால் ஏப்ரல் 2ம் தேதி அறிமுகம் செய்யப்பட்ட இந்த செயலியை, கூகுள் பிளேஸ்டோர், ஆப்பிள் ஆப்ஸ்டோர் ஆகியவற்றிலிருந்து பொதுமக்கள் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தி வருகின்றனர்.

இதுகுறித்து நிதி ஆயோக் அமைப்பின் சிஇஓ அமிதாப் காந்த் தனது ட்விட்டர் பதிவில், "ஆரோக்ய சேது செயலி அறிமுகப்படுத்தப்பட்ட மூன்று நாட்களில் 50 லட்சம் பேர் பதிவிறக்கம் செய்தனர். அதன் பின்னர் மக்களிடையே இந்த செயலி குறித்த விழிப்புணர்வு அதிகரிக்க, பதிவிறக்க எண்ணிக்கை அதிகரித்தது.